431

ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

அக்டோபர்—1959

431
4.59.



ஜீவபந்து
திரு. டி. எஸ். ஸ்ரீபால்

JL
T15m211, N40
N59 20.10.
186343

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI" OFFICE

94/95, New Street, Mannady, P. O., Madras-1.

POST BOX No. 1818.

ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள்

திரு. வி. க. தமிழ் வாசகம்

ஆசிரியர் :

பி. வீரராகவன்,

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0 5 0	3	28-5-'58
இரண்டாம் வகுப்பு	0 6 0	3	28-5-'58
மூன்றும் வகுப்பு	0 8 0	3	28-5-'58
நான்காம் வகுப்பு	0 12 0	21	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	0 10 0	3	9-4-'58

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் :

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

முதல் வகுப்பு	0 5 0	10	28-5-'58
இரண்டாம் வகுப்பு	0 6 0	5	28-5-'58
மூன்றும் வகுப்பு	0 8 0	5	28-5-'58
நான்காம் வகுப்பு	0 12 0	21	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	0 10 0	3	9-4-'58

ஆரம்பக்கல்வி

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள் முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 20	அக்டோபர் 1959	இதழ் 10

அறிஞர்கள் கருத்து இப்படி! அரசாங்க முடிவோ அப்படி!!

" இந்தப் புத்தகத்தில் இலக்கிய மதிப்பு எதுவும் இருப்பதாகக் கூறமுடியாது. மோசமான முறையில் எழுதப்பட்டு, மோசமான முறையில் அச்சிடப்பட்டும் இருக்கிறது இந்தப் புத்தகம். நூலாசிரியரும் சரி, நூலை அச்சிட்டவரும் சரி, நிறுத்தக் குறிகளைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.........ஒரு நல்ல பாடபுத்தகம் எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இந்தப் புத்தகம் ஓர் எடுத்துக்காட்டு."

இவ்வளவு கடுமையான முறையில் கண்டனக் குரல் எழுப்பியிருப்பவர், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு வி. பாலகிருஷ்ணன் அவர்கள் ஆகும்.

1863493

நீதிபதி அவர்களாலேயே இவ்வளவு அழுத்தந் திருத்தமான முறையில் கண்டிக்கப்படவேண்டிய அளவுக்குப் பிழைகள் மலிந்த புத்தகத்தை வெளியிட்ட பதிப்பகத்தார் யார்? எப்படி வெளியிட்டார்கள் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு புத்தகத்தை? பாடபுத்தகக் குழுவினர் எப்படி அங்கீகாரம் அளித்தார்கள் இத்தகைய ஒரு நூலுக்கு? என்றெல்லாம் கேள்விகள் அடுக்கடுக்காகத் தோன்றும் எவருடைய உள்ளத்திலும்.

அதிசயம் ஆனால் உண்மை! நம்பமுடியாதது ஆனால் நடந்திருக்கிறது! தவறுகள் நிரம்பிய இந்தப் புத்தகத்தைத் துணிந்து வெளியிட்டிருப்பவர்கள் தனிப்பட்ட பதிப்பகத்தார்கள் எவரும் அல்லர்—தமிழ்நாட்டு அரசாங்கத்தார்.

உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியராகிய சர் வால்டர் ஸ்காட் தீட்டியுள்ள "குவின்டன் டர்வார்ட்" என்ற நெடுங் கதையைச் சுருக்கி எழுதி, அச்சிட்டு, அதனை எஸ். எஸ். எல். சி. மாணவர்களுக்கான ஆங்கிலத் துணைப் பாடமாக வைத்திருந்தார்கள் தமிழ்நாட்டு அரசாங்கத்தார் சென்ற ஆண்டில்.

அந்தப் புத்தகத்தில் ஏராளமான பிழைகள் காணப்படுகின்றன என்றும், தப்பும் தவறும் நிறைந்த இப்படிப்பட்ட புத்தகத்தைப் படிப்பதால் மாணவர்களின் அறிவு வளர்ச்சி தடைப்படுவது உறுதி என்றும், கல்லூரிகளுக்குச் செல்லவேண்டிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு இந்தப் புத்தகம் நீக்கமுடியாத ஒரு தடையாக உள்ளது என்றும், இந்தப் புத்தகத்தைத் தயாரிப்பதற்காக அரசாங்கத்தார் பணம் செலவழித்துள்ள தன்மை, பொதுமக்களின் பணத்தைப் பொறுப்பற்ற முறையில் வாரி' இறைத்ததாகவே கருதப்படவேண்டும் என்றும், ஆகவே இப்படிப்பட்ட புத்தகத்தை உடனடியாகப் பள்ளிக்கூடங்களிலிருந்து வாபீஸ் வாங்கவேண்டும் என்றும், அதற்கு ஏற்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கேட்டுச் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைப் பதிவு செய்திருந்தார் திருவாளர் டி. கே. வி. இராஜகோபாலன் என்பவர்.

திருவாளர் டி. கே. வி. இராஜகோபாலன், ஆறுவது படிவத்தில் படித்துக் கொண்டிருந்த ஒரு பிள்ளையின் தந்தை; ஓய்வுபெற்ற பள்ளிக்கூட டிபுடி இன்ஸ்பெக்டர்; தஞ்சை நகர நடுத்தரப் பள்ளிகள் சங்கத் தலைவர்.

திருவாளர் இராஜகோபாலனின் மனுவின்மீது தீர்ப்பு அளிக்கையில்தான் நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்கள், நாம் தொடக்கத்திற் குறிப்பிட்டுள்ள முறையில் கண்டனக் குரலை எழுப்பியுள்ளார்.

நிறுத்தல் குறிப்புகள்—சொற்களின் எழுத்தமைப்பு (Spelling)—இலக்கணம்—வாக்கியங்களின் அமைப்பு ஆகிய எல்லாத் துறைகளிலும் குறைபாடுகள் மிகுந்ததாக இருக்கிறது இந்தப் புத்தகம் என்பதை எடுத்துக் காட்டியதோடு நிற்கவில்லை நீதிபதி அவர்கள். ஒரு சிறந்த பாடபுத்தகம் எப்படி இருத்தல் ஆகாது என்பதற்கு இந்தப் புத்தகம் ஓர் எடுத்துக்காட்டு என்றும் இயம்பியிருக்கிறார்.

இந்த வாசகமே மிக மிகக் கடுமை—ஆனால் நீதிபதி அவர்களோ இன்னமும் ஒரு படி மேலே சென்று தொடர்ந்து தெரிவிக்கிறார்:—

"அறிவுக் கூர்மை மிக்க ஓர் ஆசிரியர் இந்தப் புத்தகத்தை மிகச் சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்ளலாம். சர் வால்டர் ஸ்காட் எழுதிய மூல நூலையும் அதன் சுருக்கமாகிய இந்தப் புத்தகத்தையும் மாணவர்களுக்கு ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலம் ஆங்கிலத்தை எப்படி எழுதக்கூடாது என்பதை மாணவர்களுக்கு அவர் எளிதில் விளக்கிக் கூறலாம். எந்த முறையில் ஆங்கிலத்தை எழுதக் கூடாது என்பதை விளக்கிக் காட்டுவதற்கு ஓர் உதாரண நூலை மாணவர்களுக்கு அளிக்கவேண்டும் என்பது கல்வித் துறை அதிகாரிகளின் நோக்கமாக இருக்குமானால் அந்த நோக்கத்தை நிறைவேற்ற இதைவிடச் சிறந்த ஒரு புத்தகத்தை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்க முடியாது. ஆனால் அவர்களுக்கு அத்தகைய நோக்கம் இருக்கக் கூடும் என்று கல்வித் துறை விதிகள் எதுவும் கூறவில்லை."

நீதிபதி அவர்களின் கண்டனம் தெள்ளத் தெளிவாகவும் அழுத்தந் திருத்தமாகவும் அமைந்துள்ளது. இதைவிடத் தெளிவான முறையில் கண்டனத்தைத் தெரிவிப்பது இயலாத செயலே அல்லவா?

12—2—59 அன்று அளிக்கப்பட்டிருப்பது இந்தத் தீர்ப்பு.

அரசாங்கத்தாரே பாடபுத்தகங்களை வெளியிடுவது என்கிற ஏற்பாடு எவ்வளவு ஆபத்து மிகுந்தது என்கிற உண்மையை இந்த நல்ல தீர்ப்பு திட்டவட்டமாக எடுத்துக்காட்டிவிட்டது.

இந்தத் தீர்ப்பைக் கண்டபிறகு தமிழ்நாட்டு அரசாங்கத்தார், ஆரம்பப்பள்ளிகளுக்கான பாடபுத்தகங்களைத் தாங்களே வெளியிடுவது என்று முன்பு கொண்டிருந்த தவறான முடிவைக் கைவிட்டுவிடுவார்கள் என்றே நல்லறிவாளர்கள் அனைவரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அண்மையில் அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றைக் காணும்போது, இன்னமும் அரசாங்கத்தார்,

தங்களுடைய பழைய பிடிவாதத்தைக் கைவிடவில்லை என்கிற உண்மை வெள்ளிடைமலை யென விளக்கமாகிறது.

தமிழ் நாட்டு அரசாங்கத்தார், 1960—61 ல் புதிய ஐந்தாம் வகுப்புக்குரிய ஆங்கிலப் பாடபுத்தகத்தை வெளியிடுவார்களென்றும், 1961—62 ல் இரண்டு வகுப்புகளுக்குத் தமிழ்ப் பாடபுத்தகங்களை வெளியிடுவார்களென்றும், 1962-63 முதல் எல்லா வகுப்புகளுக்கும் உரிய தமிழ்ப் பாடபுத்தகங்களை வெளியிடுவார்களென்றும் அண்மையில் வெளி வந்த அரசாங்க அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

சென்ற ஆண்டில் எஸ். எஸ். எல். சி. வகுப்புக்குத் தாங்கள் வெளியிட்ட ஆங்கிலத் துணைப் பாடநூல் மாபெருந் தோல்விக்கு ஒரு மகத்தான எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது என்பதைக், கண்கூடாகக் கண்ட பிறகுங்கூட, அரசாங்கத்தார், தங்களுடைய தவறான கருத்தைக் கைவிட முன்வராமல் மேலும் மேலும் தவறான பாதையிலேயே பயணம் செய்ய முனைவதைக் காணும் எவரும், “இப்படியுமா ஓர் அரசாங்கம் தவறு செய்வது—இப்படியுமா ?” என்று கேட்காமல் இருக்கமுடியாது.

அரசாங்கமே பாடபுத்தகங்களை வெளியிடுவது என்கிற ஏற்பாடு, ஜனநாயகக் கோட்பாட்டிற்கு முரணானது ; கல்வியின் வளர்ச்சிக்குக் கேடு சூழ்வது ; மாணவர்களின் நன்மைக்கு ஒவ்வாதது ; நாட்டின் முன்னேற்றத்திற்கும் தடையாக அமைவது. இந்தப் பிரச்சினையை ஆற அமர இருந்து அலசி ஆராய்ந்து சிந்தித்துப் பார்க்கிற எவரும் இந்த முடிவுக்குத்தான் வருவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அரசாங்கத்தாரே பாடபுத்தகங்களை வெளியிடுவதால் ஏற்படக்கூடிய முதற்பெருந் தீமை, எப்படி எப்படி எழுதினால் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சி சிறப்படையும் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், எப்படி எப்படி எழுதினால் அரசாங்கத்தாருக்குத் திருப்தி ஏற்படக்கூடும் என்கிற கண்ணோட்டத்திலிருந்து புத்தகங்கள் எழுதப்படும் என்பதுதான். ஜனநாயக ஆட்சிமுறையின்கீழ், என்றென்றும் ஒரு குறிப்பிட்ட கட்சியே ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் என்று கூறமுடியாது. ஒவ்வோர் சமயத்தில் ஒவ்வோர் கட்சி ஆட்சிப் பீடத்தில் அமரக்கூடும். அரசாங்கத்தாரே பாடநூல்களை வெளியிடுவார்களானால், எந்தெந்த நேரத்தில் எந்தெந்தக் கட்சி ஆட்சிப் பீடத்தை அலங்கரிக்கிறதோ அந்தந்த நேரத்தில் வெளியாகிற புத்தகங்கள், அந்தந்தக் கட்சியினருக்குத் திருப்தி அளிக்கிற முறையில் தான் அமைய முடியும். அந்தந்தக் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் எண்ணங்களையும் ஏற்பாடுகளையும் நேர்முகமாகவோ

மறைமுகமாகவோ பாடபுத்தங்களில் திணிக்கும் முயற்சி நிச்சயம் நடைபெறும். அந்தந்தக் கட்சியின் தலைவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளும் அந்தத் தலைவர்களின் கருத்துரைகளும் மிக எளிதில் அப் புத்தகங்களில் இடம் பெற்றுவிடும். இப்படியெல்லாம் நடைபெறமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று இப்போது உள்ள அமைச்சர்கள் உறுதி மொழி புகலக்கூடும். ஆனால் இந்த அமைச்சர்களே என்றென்றும் பதவிப் பீடத்தில் அமர்ந்திருப்பார்கள் என்று யார் உறுதி கூறமுடியும்? இந்த அமைச்சர்கள் பதவியை இழந்து வேறு அமைச்சர்கள் பதவிக்கு வருவார்களானல், இவர்களுடைய உறுதி மொழியை அவர்களும் நிறைவேற்றுவார்கள் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? ஆளும் கட்சிக்கு ஆதரவான பிரசாரம் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ பள்ளிப் புத்தகங்களில் நுழைந்துவிடுமானல், ஜனநாயகக் கோட்பாட்டின் வளர்ச்சிக்குப் போபத்து விளையும் என்பதை, யார்தானகட்டும், எப்படி மறுத்துவிட முடியும்?

பாடபுத்தகங்களை அரசாங்கத்தாரே வெளியிடுவதால் ஏற்படக்கூடிய மற்றொரு பெரிய ஆபத்து பாடபுத்தகங்கள், வரிவிதிப்புத் திட்டங்களாக மாறிவிடக்கூடும் என்பதாகும். இப்போதெல்லாம் அரசாங்கத்தார், தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகப் புதிய புதிய வருவாய்த் துறைகளைத் தேடியலைகிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. நிதி நிலை நெருக்கடி அதிகமாகும் போது, அரசாங்கத்தார், தங்களுடைய பாடபுத்தகங்களின் விலையை, அதன் நியாயமான அளவிலிருந்து மேலும் பல மடங்கு உயர்த்தி, அப்படி உயர்த்துவதன் மூலமாகத் தங்களுடைய வருமானத்தை வளர்த்துக்கொள்ள விழைவது இயற்கையே அல்லவா? புத்தகங்களின்விலை, இப்படியெல்லாம், நியாயமான அளவிலிருந்து எந்த அளவுக்கு உயர்த்தப்படுகிறதோ அந்த அளவுக்கு, விலை, விலையாக இல்லாமல் வரியாகத்தானே மாறிவிடுகிறது! தனியார் பதிப்பகத்தார் தங்கள் புத்தகங்களின் விலையை உயர்த்தினல் அந்த விலை உயர்வை அரசாங்கத்தார் தடுக்கக்கூடும். ஆனல் அரசாங்கத்தாரே விலையை உயர்த்தினல் தடுப்பவர் யார்? தடுப்பதுதான் எப்படி ? தற்போது புத்தக வெளியீடு தனியார் துறையின் உரிமையாக இருப்பதால், ஒரே வகுப்புக்குரிய ஒரே பாடத்துக்கு வெவ்வேறு பதிப்பகங்கள் வெவ்வேறு ஆசிரியர்களைக் கொண்டு வெவ்வேறு புத்தகங்கள் வெளியிடுகின்றன. இந்த நிலைமையின் காரணமாக, பாடங்களின் அமைப்பிலும், படங்களின் தன்மையிலும், எழுத்து நடையின் எழிலிலும், கருத்துக்களை எடுத்துச் சொல்கிற வகையிலும், புத்தகத்தை அச்சிட்டுத் தந்த முறையிலும், ஒவ்வொரு பதிப்பகத்தின் புத்தகத்திலேயும் ஒருவித தனிச்சிறப்பு — ஒரு தனி அழகு — ஒரு தனித் தன்மை காணப்படுகிறது. பல்வேறு புத்தக ஆசிரியர்கள் தத்தம்

தனித் தன்மையையும் (Originality) தனித் திறமையையும் (Efficiency) மலர்ந்து மணம் வீசச் செய்யும் வாய்ப்பும் இருக்கிறது. பல்வேறு புத்தகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, எது தங்களுக்குச் சிறந்ததாகத் தோன்றுகிறதோ அதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிற உரிமையும் (The right to choose) பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் தலைமையாசிரியர்கட்கும் இருக்கிறது. அரசாங்கத்தாரே புத்தகங்களை வெளியிடுவார்களானால் இத்தனை வாய்ப்புகளும் வசதிகளும் அழிந்து, அரசாங்கத்தார் வெளியிடுகிற ஒரே ஒரு புத்தகத்தைத்தான் — அது நன்றாக இருந்தாலும் இராவிட்டாலும் எல்லாப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் ஏற்றுத் தீரவேண்டும் என்கிற நிலை உருவாகும். அந்தப் புத்தகம், பிழைகள் மலிந்ததாக இருந்தாலும், எழில் அற்றதாகத் காணப்பட்டாலும், மாணவர்களின் மனப்போக்கை அறிந்து அவர்களின் உள்ளம் கொள்ளும் வகையில் பாடங்களைப் புகட்டும் தன்மை இல்லாததாக இயற்றப்பட்டிருந்தாலும் அந்தப் புத்தகத்தையே அவர்கள் கையாண்டு தீரவேண்டும். ஆம்! குறிப்பிட்ட வகுப்புக்கு எந்த புத்தகம் ஏற்றது என்பதைத் தங்கள் அனுபவத்தைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுக்கிற அரிய உரிமை ஆசிரியர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விடுகிறது — அரசாங்கத்தின் புதிய திட்டத்தால்! மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் குறுக்கே போடப் படக்கூடிய தடைகளில் இதைவிட ஆபத்துமிக்கது வேறென்ன இருக்க முடியும்?

ஆசிரியப் பெருமக்களின் ஊதியம், எண்ணிப் பார்க்கும்போதெல்லாம், இதயத்தை வேதனையின் இருப்பிடமாக ஆக்குமளவுக்கு மிகக் குறைவாக உள்ளது என்பது, அமைச்சர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற உண்மை. "இந்த நாட்டில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற ஊதியம் அரசாங்கப் பியூன்களுக்கு அளிக்கப்படுகிற ஊதியத்தைவிடக் குறைவாக இருக்கிறது என்பதை நினைக்கும்போதெல்லாம் நான் வெட்கத்தால் தலைகுனிகிறேன்" என்று இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு சில மாதங்களுக்கு முன்னால் தெரிவித்த வாசகம், ஆசிரியர்களின் ஊதிய நிலையைப் படம் பிடித்துக் காட்டும் சோகம் ததும்பும் சொல்லோவியம் ஆகும். இத்தகைய நிலையில் உள்ள ஆசிரியர்களில் பலருக்குத் தற்போது ஓரளவு கூடுதலான வருமானத்தை அளிக்கும் வாய்ப்பாக இருப்பது பாடபுத்தகங்கள் எழுதும் துறையாகும். எத்தனையோ ஆசிரியர்கள், வறுமைக் கடலில் கிடந்து தவிக்கும் தங்கள் குடும்பப் படகை முறைப்படி ஓட்டிச் செல்வதற்குரிய துடுப்பாகக் கொண்டிருப்பது புத்தகத்துறை அளிக்கும் இந்த வருமானத்தைத்தான். புத்தகத்துறை தனியார் பதிப்பகங்களிடம் இருக்கும் வரையில்தான் ஏராளமான ஆசிரியப் பெருமக்களுக்கு இந்த அரிய வாய்ப்பு இருக்கமுடியும். புத்தக

வெளியீடு அரசாங்க உரிமையாக மாறிவிடுமானால், ஆளும் கட்சியின் ஆசைக்கு உரிய இரண்டோர் ஆசிரியர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு கிட்டும். ஏனைய ஆசிரியர்கள் அனைவரும் இந்தத் துணை வருமானத்தை இழந்து தவிப்பது உறுதியினும் உறுதி.

தனியார் துறையில் புத்தக வெளியீடு இருக்கும்வரை, ஒரே பாடத்துக்குப் பல பதிப்பகங்கள் மூலம் பல நூல்கள் வெளியாவதால், எண்ணற்ற அச்சுக்கூடங்களுக்கும், அவற்றில் பணிபுரியும் அச்சுப்படி திருத்துவோர் — எழுத்துக் கோப்போர் — அச்சுப் பொறியில் தாள்களைப் பொருத்துவோர் — புத்தகக் கட்டட வேலையில் ஈடுபடுவோர் ஆகிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும், பல்வேறு பதிப்பகங்களில் பணிபுரியும் எழுத்தாளர்களுக்கும் புத்தகங்களைக் கட்டுக் கட்டி அனுப்பும் பணியாளர்களுக்கும் மிகுந்த வேலை இருக்கிறது. புத்தக வெளியீடு அரசாங்கத்துறைக்கு மாறுமானால் பல அச்சகங்களும் பதிப்பகங்களும் தங்கள் வேலையை இழக்கும். அதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் பணியிழந்து தவிப்பர். இப்போதே நாட்டில் ஆட்சியாளர்களால் சமாளிக்க முடியாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து போயிருக்கிறது. அரசாங்கத்தின் புதியதிட்டம் நடைமுறைக்கு வருமானால் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடிய உருவம் மேலும் பலமடங்கு கொடுமை நிரம்பியதாக மாறிவிடும்.

இப்படிப்பட்ட ஆதாரங்கள் பலவற்றை அடுக்கடுக்காக எடுத்துக்காட்டிவிட்டு சென்னை "மெயில்," அதனுடைய 20-2-59 இதழின் தலைமைக் கட்டுரையில், "**அரசாங்கப் பாடபுத்தகங்கள், ஆபத்து மிகுந்தவை — அநீதி நிரம்பியவை என்கிற மறுக்கமுடியாத முடிவுக்குத்தான் இந்த உண்மைகள்யாவும் நம்மை அழைத்துச் செல்கின்றன**" என்று தெள்ளத் தெளிவாக எழுதியிருந்தது.

நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்களும், நாம் தொடக்கத்தில் சுட்டிக் காட்டிய வழக்கின் தீர்ப்புரையில், "**பாடபுத்தகங்களை வெளியிடும் பொறுப்பைத் தனியார் பதிப்பகங்களின் ஊக்கத்துக்கும் முயற்சிக்கும் விட்டுவிடுவதே சிறப்புமிக்க ஏற்பாடாகும். பொருளாதாரத் துறைகளில் ஏகபோக நிலை இருப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளைவிட, கல்வித் துறையில் ஏகபோக நிலை இருப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் மிக அதிகம்**" என்று ஐயம் திரிபுக்கு இடமின்றி அறிவுரை பகர்ந்திருக்கின்றார்.

மதிப்புக்குரிய நீதிபதி அவர்களும் சிறப்புக்குரிய இதழாசிரியர்களும் மட்டுமல்ல, கல்வி நீரோடையானது நாடெங்கும் விரைந்

(14—ஆம் பக்கம் பார்க்க)

செயற்கரிய செய்த செந்தமிழ்ச் செம்மல்!

[மா. இளஞ்செழியன் எம். ஏ.]

“என்ன முருகா அது—ஊர்க் கோடியில் ஏதோ பெரிய கூட்டம் திரண்டு காணப்படுகிறது?”

“அதுவா கோபால்—வேறு வேலையற்றதுகளின் வீண்செயல்! போக்கிடமற்றதுகளின் பொறுப்பற்ற கூச்சல்!”

“என்ன சொல்கிறாய் நீ? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! யார் அங்கே கூட்டம் போட்டிருக்கிறார்கள்? எதைப்பற்றிப் பேசுகிறார்கள்?”

“அந்த விபரீதத்தை ஏனப்பா கேட்கிறாய்? யாரோ சென்னையிலிருந்து வந்திருக்கிறார் கறுப்பாக ஓர் ஆள். அவர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நம் ஊர் மாரியம்மனுக்கு ஆண்டாண்டுக் காலமாக ஆடு, எருமை, கோழிகளைப் பலியிட்டு வருகிறோமல்லவா அதை இந்த ஆண்டு முதல் செய்யக்கூடாதாம். ஆண்டவனுடைய இல்லத்தில் உயிர்களைப் பலியிடுவது காட்டுமிராண்டி வழக்கமாம். அன்பே உருவான ஆண்டவன் தன் பக்தர்களிடமிருந்து அன்பைத்தான் காணிக்கையாகக் கேட்பாரே தவிர ஆடுமாடுகளைக் கேட்கமாட்டாராம். என்னென்னவோ உளறுகிறாரப்பா அந்த ஆள்!”

“நன்றாக இருக்கிறதே கதை! மாரியம்மனுக்காவது பலியிடாமல் இருப்பதாவது? பலியை நிறுத்தினால் ஊரின்கதி என்ன ஆவது? கொள்ளை நோய் திரண்டு ஊர் மக்கள் அனைவரையும் விழுங்கிவிடாதா?”

“அதுதான் எனக்கும் பயமாக இருக்கிறது! காலரா, வைசூரி, ப்ளேக்—ஒவ்வொன்றாக வந்துவிடாதா ஊரைநோக்கி! பலியை நிறுத்தினால் அம்மனின் கோபம் சும்மாவா விட்டுவிடும் ஊர்மக்களை”

“சரி சரி பேசிக்கொண்டிருக்க நேரமில்லை! புறப்படு உடனே! முத்தன், முனியன், சடையன், சிங்காரம், கருப்பன், கண்ணப்பன் அனைவரையும் கூப்பிட்டுக்கொண்டுவா! எல்லோருமாகப் போய் அந்தக் கூட்டத்தை உடனே கலைத்தாக வேண்டும்!”

“ஆமாம்! பலியை நிறுத்து அப்படி இப்படி என்று பேசுகிறாரே அந்த ஆள், அவரையும் இந்த ஊரைவிட்டு உடனே விரட்டியடிக்கவேண்டும்!”

“கூட்டமாம் கூட்டம்! ஊரைக் கெடுக்கிற கூட்டம்! புறப்படு புறப்படு! உடனே தடுத்து நிறுத்தியாக வேண்டும் இந்த அக்கிரமத்தை!”

இப்படிப்பட்ட உரையாடல்கள் தமிழகத்தில் சென்ற முப்பதாண்டுக் காலத்தில் எண்ணற்ற சிற்றூர்களிலும் பேரூர்களிலும் பலமுறை நிகழ்ந்திருக்கின்றன.

மாரி—பிடாரி—காளி முதலிய அம்மன்களின் கோயில்களில் ஆண்டுதோறும் ஆடுகளையும், கோழிகளையும், பன்றிகளையும், எருதுகளையும் பலியிட்டு, அப்படிப் பலியிடுவதன் மூலம் அந்த அம்மன்களின் அன்பையும் அருளையும் ஆதரவையும் பாதுகாப்பையும் பெற முடியும் என்று எண்ணுவது நம் நாட்டில் நீண்ட காலமாக இருந்து வருகிற ஒரு மூட நம்பிக்கை. நீண்டகாலமாக இருந்துவருவது மட்டுமல்ல, எளிதில் அசைத்து அழிக்க முடியாதவகையில் பாமர மக்கள் பல்லாயிரவர் உள்ளத்தில் வேரூன்றிப் போயிருக்கிற நம்பிக்கையும் ஆகும் அது. தங்களுடைய சொத்து சுகங்கள் அழிந்தாலும் கவலையில்லை—வீடுவாசல் பறிபோனாலும் அக்கறையில்லை—உயிரே போனால் கூடப் பரவாயில்லை—அம்மனுக்குப் பலியிடும் வழக்கம் மட்டும் நிற்கக்கூடாது என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிற அளவுக்கு ஆயிரமாயிரவர் நெஞ்சங்களைத் தன்னுடைய மாறாத அடிமைகளாக ஆக்கிவைத்துக்கொண்ட ஆற்றலும் சிறப்பும் படைத்தது அந்த நம்பிக்கை. இத்தகைய போராற்றல் படைத்த ஒரு பழக்கத்தை உடனே கைவிட்டுவிடுவதுதான் சாலச் சிறந்த ஏற்பாடு என்று ஒருவர் இயம்பினால், அப்படி இயம்புபவர்மீது, இழிமொழிகளும் பழிச்சொற்களும் வீசப்படுவது இயற்கை. ஆகுமா இந்த அடாத பேச்சு என்று ஆத்திரத்தோடு கேட்பவர்களும், ஆண்டவனுக்கே விரோதமாக நடக்க எவ்வளவு ஆணவமய்யா இவனுக்கு என்று சீறியெழுந்து சினத்தைப் பொழிபவர்களும், விட்டுவைக்கக் கூடாது இந்த வீணனை என்று விபரீத மொழி பேசியபடி விரட்டியடிக்க வருபவர்களும் ஏராளமாக இருக்கத்தான் செய்வர். பற்பல திசைகளிலிருந்து, பற்பல உருவங்களில், எதிர்ப்பு, அணி அணியாகத் தோன்றி வேகமாக வருவதும் எதிர்பார்க்கக்கூடியதுதான். அப்படித்தான் புறப்பட்டது எதிர்ப்பு அலை அலையாக! ஆனால் அந்த எதிர்ப்பைக் கண்டு அஞ்சாமல், வீசப்பட்ட பழிமொழிகளைக் கண்டு மனம் சளைக்காமல், தொடுக்கப்பட்ட தாக்குதல்களைக் கண்டு ஒதுங்கி ஓடாமல், இறைவனின் இல்லங்களில் உயிர்களைப் பலியிடும் பொருந்தாத வழக்கத்தை எதிர்த்துச் சென்ற முப்பது ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பணியாற்றி வந்திருக்கிறார்—ஆற்றிய பணியில் இணையற்ற வெற்றியும் பெற்றிருக்கிறார் **ஜீவபந்து உயர்திரு டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள்.**

கம்பீரமான தோற்றம்—களைபொருந்திய முகம்—கனிவு ததும்பும் பார்வை — அன்பு நிறைந்த சொற்கள் —எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்று எண்ணும் பரந்த உள்ளம்—மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, எடுத்த பணியில் வெற்றியைத் தொடுக்கும் வரையில் ஓயாது பணியாற்றும் செயல்திறம்—இத்தனையும் படைத்தவர்தான் திருவாளர் ஸ்ரீபால்.

காஞ்சிபுரத்திற்குப் பத்துக் கல் தொலைவில் உள்ள திருப்பறம்பூர் என்னும் கிராமத்தில், 1900-ல், திருவாளர் குணபால நயினர்—திருமதி குழந்தை அம்மாள் ஆகிய தம்பதிகளின் அருமருந்தன்ன செல்வமாய்த் தோன்றிய ஸ்ரீபால் அவர்கள், தம் இளமைப் பருவத்திலேயே, அன்புருவாகிய ஆண்டவனின் கோயில்களில் அந்த ஆண்டவனின் பிள்ளைகளாகிய உயிர்களையே பலியிடும் பொல்லாத வழக்கத்தை எண்ணி எண்ணி உள்ளம் நோகலானார். இந்தத் தீய வழக்கத்தை எப்படியாவது தமிழகத்திலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்கிற நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் மெள்ள மெள்ள அரும்பலாயிற்று. இத்தகைய ஆர்வம்ததும்பும் உள்ளத்தோடு, திரும்பறம்பூரை அடுத்த நெல்லி என்னும் சிற்றூரில், ஊராட்சி மன்றப் பள்ளிக்கூடத்தில் ஓர் ஆரம்ப ஆசிரியராகப் பணியாற்றிவந்த ஸ்ரீபால் அவர்களின் கண்களையும் கருத்தையும் ஒருநாள், நாளிதழ் ஒன்றில் வெளியான சிறு செய்தி ஒன்று கவர்ந்தது. "சென்னை நகரில் அமைந்துள்ள தென்னிந்திய ஜீவரட்சகப் பிரசார சபையினர் சென்னைக்கு அடுத்த பெரியபாளையத்தில் நடைபெறும் உயிர்ப்பலியைத் தடுப்பதற்காக வருகிற ஆடி மாதத்தில் அங்குச் சென்று பிரசாரம் செய்ய இருக்கின்றனர்" என்பதே அந்தச் செய்தி. அந்தச் செய்தித் துணுக்கைக் கண்டதும் கதிரவன் வரவு கண்ட கமலம் போல் மலர்ந்து அன்னாரின் உள்ளம். அனுமதியளித்தால் தானும் வந்து பிரசாரத்தில் கலந்து கொள்வதாக அச் சபையினருக்கு ஒரு முடங்கல் தீட்டினார்—அனுமதி கிடைத்தது—சென்றார்—பேரார்வத்துடன் பிரசாரத்தில் கலந்துகொண்டார். இரண்டோர் மாதங்களுக்குப் பிறகு தன்னுடைய ஆரம்ப ஆசிரியர் பணியினின்றும் விலகி, அந்தச் சபையின் முழுநேரப் பிரசாரகராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அப்போது அவருக்கு வயது 27 இப்போது அன்னாரின் அகவை 60 தன்னுடைய இருபத் தேழாவது வயதில்—கட்டிளம் பருவத்தில் தொடங்கிய அந்த 'ஆருயிர்க் கெல்லாம் அன்பு செய்யும்' அரும்பணியை அறுபது என்கிற வயதை யெய்திய இந்த முதுமைப் பருவத்திலும் விடாது நடத்தி வருகிறார் அந்தத் தொண்டின் செல்வர்.

கோயில்களில் நடைபெற்றுவந்த உயிர்ப்பலியைத் தடுத்து நிறுத்துவதற்காக இந்த முப்பது ஆண்டுகளில் அந்த அரும் பெருந்

தொண்டர் எண்ணற்ற ஊர்களுக்குச் சென்று, எத்தனையோ இடையூறுகளுக்கு இடையே பொதுக் கூட்டங்களைக் கூட்டி, கேட்பவர் தம் உள்ளத்தையெல்லாம் உருக்கத்தக்க அரிய சொற்பொழிவுகளையாற்றி, திரண்டு குழுமியிருந்த மக்களின் உள்ளங்களைத் தன் வயமாக்கிப் பலியை நிறுத்தும்படி செய்திருக்கிறார். எத்தனையோ ஊர்களில்,அந்த அறிஞர் பெருமகனாரின் கூட்டத்தைக் கலகம் செய்து கலைத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு கூட்டத்திற்கு வந்த பூசாரிகளும் பிறரும், அவருடைய சொற்பொழிவுகளைச் செவிமடுத்த பிறகு, முற்றிலும் மனம் மாறியவர்களாய், அந்தக் கூட்டத்திலேயே,அனைவரும் அறியும் வகையில் 'இனி ஒருக்காலும் பலியிட மாட்டோம்' என்று உறுதிமொழி கூறிப் பலியை நிறுத்தியிருக்கிறார்கள். கோயில்களில் உயிர்ப்பலியிடும் வழக்கம் காட்டு மக்களிடமிருந்தே நாட்டு மக்களிடம் பரவியிருக்கிறது என்றும், இத்தகைய வழக்கத்திற்கும் உண்மையான இறை வழிபாட்டிற்கும் எத்தகைய தொடர்பும் இருக்கமுடியாது என்றும், "சமயத்தின் பெயராலும், தெய்வத்தின் பெயராலும் உயிர்களைப் பலியிடுதல் காட்டுமிராண்டித்தனத்தின் கையிருப்பு" என்று காந்தியடிகள் தெரிவித்துள்ள கருத்துரையை எண்ணிப் பார்த்தால் உண்மை புலனாகும்என்றும், தாயுமானார்—இராமலிங்கர்—திருமூலர்—இளங்கோ அடிகள்—திருவள்ளுவர் முதலிய சான்றோரும் ஆன்றோரும் இந்த வழக்கத்தை ஒருநாளும் ஒப்புக்கொண்டதில்லை என்றும், அவர், எண்ணற்ற பெரியார்களின் மேற்கோள்களுடன், இனிமையும் எழிலும் ததும்பும் முறையில், கருத்துச் சுவையும் நகைச்சுவையும் கலந்த வகையில் உரையாற்றுவதைக் கேட்டால் கல் மனமும் கரையும்—இரும்பு நெஞ்சமும் இளகும். இது நூற்றுக்கு நூறும் உண்மை; வெறும் பாராட்டுரை அன்று. "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரையும் வேட்ப வைப்பதாம் சொல்" என்று வள்ளுவப் பெருந்தகையார் வகுத்த அரிய இலக்கணத்துக்கு ஓர் அற்புதமான இலக்கியமாகத்திகழ்வது ஸ்ரீபால் அவர்களின் சொற்பொழிவு.

சிறந்ததோர் சொல்லின் செல்வராக அவர் ஒளி வீசித்திகழ்ந்தார் என்றபோதிலும், பலியைத் தடுத்து நிறுத்துவதற்கும் பாமர மக்களுடைய உள்ளத்தை மாற்றுவதற்கும் அவர் சொற்பொழிவு என்கிற ஒரு கருவியை மட்டுமே நம்பியிராமல் வேறுபல அரிய முறைகளையும் கையாண்டார். பலியைத் தடுப்பதன் இன்றியமையாமையை விளக்கும் வகையில் கவர்ச்சிகரமான சுவரொட்டிகள், உரையாடல் முறையில் அமைந்த துண்டு வெளியீடுகள், உள்ளத்தை உருக்கும் இசைப் பாடல்கள், பாமரர் மனத்தைக் கவரும் சிறுகதைகள், காணக்காண இனிக்கும் நாடகங்கள் முதலிய பலவற்றையும் அவர் தயாரித்துப் பட்டிதொட்டி—நாடுநகரம்—மூலை முடுக்கு—எங்கெங்கும் பரப்பி

ஊர். பலித் தடுப்புக் கருத்தை அடிப்படையாக வைத்து அவர் தீட்டிய **பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை** என்கிற நாடகமும், **கலியுகப் பிரகலாதன்** என்ற நாடகமும் தமிழகத்தின் பற்பல ஊர்களிலும் பள்ளிக்கூடங்களிலும் நடிக்கப்பெற்று நாட்டு மக்களுடைய உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியையும் புது எழுச்சியையும் உருவாக்கிய பெருஞ் சிறப்பு, நாடறிந்த உண்மை. 1932ம் ஆண்டில், இரண்டு நாட்கள், சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில், பாலசுந்தரம் என்னும் நாடகம் நடிக்கப்பட்டபோது 5000 ரூபா வசூலானதைக் கண்டு பரம்பரை நாடகக் குழுவினர்கூட வியப்பும் திகைப்பும் அடையலாயினர். அந்தக் காலத்தில் ஒரு நாடகத்துக்கு 5000 ரூபா வசூலாவது என்றால் அதனை ஒரு மகத்தான சாதனை என்றே கூறவேண்டும்.

அன்பே உருவாக அமைந்த அந்த அண்ணலின் ஓயாத உழைப்பின் விளைவாக நூற்றுக்கணக்கான சிற்றூர்களிலும் நகரங்களிலும் உயிர்ப் பலியிடும் கொடிய வழக்கம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்றாலும், திருமங்கலம், சங்கர நயினார் கோயில், பாளையங்கோட்டை, திருவொற்றியூர், ஆத்தூர், கோயமுத்தூர், திருப்பாதிரிப்புலியூர், திருநெல்வேலி மாவட்டம் புதுப்பட்டிக் கிராமம் முதலிய ஊர்களில் அவர் ஆற்றியுள்ள பலி நிறுத்தத் தொண்டு சிறப்பாகக் குறிக்கத்தக்கது ஆகும். சென்னை திருவொற்றியூரில் பல்லாண்டுகளாக நடைபெற்று வந்த பலியிடும் வழக்கத்தை நிறுத்துவதற்காக 1936ம் ஆண்டில் ஸ்ரீபால் அவர்கள் உண்ணாநோன்பு இருந்து கோயில் தர்மகர்த்தர்களின் மனத்தை மாற்றி வெற்றிபெற்ற செய்தி, அச் சமயத்தில் சென்னை நகரத்தையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது.

பன்னெடுங்காலமாக மக்கள் மன்றத்தில் வேரூன்றிப் போயிருக்கிற ஒரு வழக்கத்தை எதிர்த்துப் போராடுகிற சீர்திருத்தச் செம்மல்கட்கு, அவர்களுடைய வாழ்நாளிலேயே அந்தப் பழக்கம் சமுதாயத்திலிருந்து அடியோடு கல்லி யெறியப்படுகிற காட்சியைக் காண்கிற பேறு பெரும்பாலும் கிடைப்பதில்லை. ஆனால் ஓயாத உழைப்பின் நடமாடும் அடையாளமாகக் காட்சியளிக்கும் அன்பர் ஸ்ரீபால் அவர்கட்கோ அந்தக் கிடைத்தற்கரியபேறு கிடைத்திருக்கிறது. அவருடைய இடைவிடாத தொண்டின் விளைவாக, கோயில்களில் உயிர்ப் பலி இடுவதைத் தடுக்கும் சட்டம் தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் 1950ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு, 1-6-51 முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. எத்தனையோ நூற்றாண்டுகளாக இருந்து வந்த ஒரு செயலைத் தன் வாழ்நாளிலேயே சட்டமிட்டுத் தடுக்கிற அளவுக்கு ஒரு தனி மனிதருடைய பொதுத்தொண்டு வெற்றி பெற்-

றிருக்கிறது என்றால், அத்தகைய வெற்றியை அடைந்த வீரத் தமிழரைச் செயற்கரிய செய்த பெரியார் என்று நாடும் ஏடும் ஒருங்கே புகழ்வதில் வியப்பென்ன இருக்கமுடியும்?

தலையாயதோர் மூடநம்பிக்கையைத் தமிழக மண்ணிலிருந்து விரட்டியடித்த பகுத்தறிவுப் போர் வீரராகிய ஸ்ரீபால் அவர்கள், தமிழ் இலக்கியத் துறையிலும் நுண்மாண் நுழைபுலம்படைத்த அறிஞராவார். பொதுவாகத் தமிழ்ப் பெரு நூல்களிலும், சிறப்பாகச் சீவகசிந்தாமணி—திருக்குறள்—நாலடியார் ஆகிய இலக்கியங்களிலும் ஆழ்ந்த பயிற்சியும் அகன்ற புலமையும் படைத்தவர், அந்த அருஞ்செயல் புரிந்த அண்ணல். இளங்கோவடிகள் சமயம் யாது, எம்மான் கோயில், சமணர் மலை செல்வோம், பகுத்தறி வியக்கத்தின் பழமை ஆகிய அரிய நூல்கள், அந்த அறிவின் செல்வரால் தமிழகத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிற எழில் ததும்பும் எழுத்தோவியங்களாகும்.

'**இளங்கோவடிகள் சமயம் யாது**' எனும் அரிய ஆராய்ச்சி நூல், தமிழ்ப் பெரும் புலவர்களால் மிகச் சிறந்த முயற்சி என்று பாராட்டிப் புகழ்ப்பெற்ற பெருமை படைத்ததாகும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறைக்குக் கிடைத்துள்ள ஒப்பற்றதோர் கருவூலம் அந்த ஏடு. நெஞ்சையள்ளும் நேர்த்தி மிகுந்த செஞ்சொற் காவியமாம் சிலப்பதிகாரத்தை இயற்றித் தந்த இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவரே என்னும் உண்மையை நடுநிலை உள்ளம் படைத்த எவரும் மறுக்கமுடியாத வகையில் நிலைநாட்டியிருக்கிறது அந்தப் புத்தகம். அந்நூலின் நடையழகும், கருத்தழகும், கருத்துக்களை நிரல்நிரலே எடுத்து விளக்கும் முறையழகும் செந்தமிழர் தம் சிந்தனைக்கு நல்விருந்தாக அமைந்துள்ளன.

பத்திரிகைத் துறையிலும் ஸ்ரீபால் அவர்களுக்கு நல்ல அனுபவம் உண்டு. 1931 முதல் 1936 வரை வரை அவர் ஆசிரியராக இருந்து நடத்திவந்த '**ஜீவ ரக்ஷகன்**' என்னும் திங்கள் இதழ், ஒரு சிறந்த பத்திரிகையை எப்படி நடத்தவேண்டும் என்பதற்குரிய எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. தற்போதும் அவர் '**நல்லறம்**' என்னும் நல்லதோர் இதழை நன்முறையில் நடத்தி வருகின்றார்.

சமண சமயத்துச் சான்றோர்களால் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள வலிவையும் பொலிவையும் எழிலையும் ஏற்றத்தையும் நாட்டு மக்களெல்லாம் நன்கறியும்படி உணர்த்திய பெருமையும் ஸ்ரீபால் அவர்களுக்கு உண்டு. சமணசமய வரலாற்றுச் சிறப்பு மிகுந்ததும், சமண முனிவர்தம் சிலைகளும் கல் வெட்டுச் செய்திகளும் நிரம்பியதுமாகிய சமணர் மலை, மதுரைக்கு அருகில் உள்ள ஒரு குன்று. அதன் சிறப்பை அறியாதார், அதனை

உடைத்து வீதிகள் அமைப்பதற்கான கற்களைப் பெறமுயன்றபோது, அதனைக் கண்டு திடுக்கிட்டு, அரசாங்கத்தாருக்கு விண்ணப்பம் செய்து, "அம்மலையை, பாதுகாத்தற்குரிய வரலாற்றுச் சின்னங்கள்" என்ற பட்டியலில் சேர்க்கும்படிச்செய்து அம்மலையைக் காப்பாற்றியவர் ஸ்ரீபால் அவர்கள்.

சிறந்த பேச்சாளராய், உயர்ந்த எழுத்தாளராய், அரிய நாடகாசிரியராய், ஒப்பற்ற தொண்டராய், செந்தமிழ்ப் புலவராய், உயிர்ப் பலி நிறுத்திய உத்தமராய், மூடநம்பிக்கையை முறித்துத் தள்ளிய மாவீரராய் ஓங்கு புகழ் எய்தி ஒளிவீசித் திகழும் ஸ்ரீபால் அவர்கள், விழுமிய பண்புகள் யாவும் கெழுமிய சிறப்புடையவர்; பழகப் பழக இனிக்கும் பாங்கு படைத்தவர்; எவர் மனத்தையும் புண்படுத்தாத முறையில் சீர்திருத்தத் தொண்டாற்றும் சீலம் மிகுந்தவர்; அடக்கமும், பொறுமையும், ஆடம்பரமற்ற முறையில் பணிபுரியும் ஆர்வமும் நிறைந்தவர். இத்தகைய தலைசிறந்த பண்புச் செல்வரின் மணிவிழா அண்மையில் சென்னை நகரத்தில் சிறப்பு மிக்க முறையில் நடைபெற்றிருப்பது, நல்லறிஞர்தம் உள்ளத்திலெல்லாம் மகிழ்வூட்டும் நற்செய்தியாகும்.

மணிவிழாக் கொண்ட மாண்புமிகு நல்லார்—ஜீவபந்து என்று பொதுமக்களால் பேரன்புடன் அழைக்கப்படும் பெரியார்—செயற்கரிய செய்த செந்தமிழ்ச் செம்மல் திருவாளர் ஸ்ரீபால் அவர்கள் நீண்ட நெடுங்காலம் நன்கினிது வாழவேண்டும் என்பது நற்றமிழ் மக்களின் பேராவல். **வாழ்க ஸ்ரீபால்! ஏன்? தமிழகம் வாழ! தொண்டின் சிறப்பு, ஒளி வீசித் திகழ!!**

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாவி, மக்கட் சமுதாயத்தை எழிலும் ஏற்றமும் மிக்கதாக மாற்றி அமைக்கவேண்டும் என்கிற நல்லெண்ணம் படைத்த அறிஞர் பெருமக்கள் அனைவரும் இதே கருத்தைத்தான் கொண்டிருக்கின்றனர்.

ஆனால்,

தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள்......?

அவர்களுடைய கருத்துமட்டும் வேறு திசை நோக்கிச் செல்கிறது.

ஏன்?

அதுதான் நமக்குப் புரியவில்லை. நமக்கு — என்றால், நாட்டு மக்களுக்கு!

செய்திக் கொத்து

கற்கால பரம்பரையைச் சேர்ந்த குரங்கு மனிதன்

மஞ்சூரியாவில் வசிக்கிறுனும்—கண்டுபிடிக்க நிபுணர்கள் பயணம்

மஞ்சூரியாவில் காடுகள் நிறைந்த மலைப் பிராந்தியங்களில் கற்கால மனிதனின் பரம்பரையைச் சேர்ந்த குரங்கு மனிதன் வசிப்பதாகக் கூறப்படுகிறது. இதனைக் கண்டறிந்து ஆராயும் ஆர்வத்துடன் 5 பேரடங்கிய குழுவொன்று விரைவில் சிட்னியிலிருந்து தம் பயணத்தைத் துவங்க இருப்பதாகத் தெரிகிறது.

குழுத் தலைவர் டாக்டர் ஜான் பிரினியாஸ் எதிர் பார்ப்பது போல் திட்டம் வெற்றி பெறுமானல் விஞ்ஞானிகள் இலட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கற்கால வாசிகளின் பரம்பரையைச் சேர்ந்தவர்களை நேரில் கண்டு சரித்திரத்தில் ஒரு திருப்பம் காணலாம்.

குரங்கு மனிதன் தழையுடையும் தோலுடையும் அணிந்து விலங்கினங்களின் குரல் ஒலியில் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதாகக் கூறப்படுகிறது.

ஆராய்ச்சிப் பயணத்தின் நோக்கம் குரங்கு மனிதக் கூட்டத்தைக் கண்டறிந்து வாழ்வை ஆராய்ந்து கற்கால மனித நாகரிகத்தை ஆராய்வதேயாகும் என்று தெரிகிறது.

ஒரு ரஷ்ய விஞ்ஞானியின் கருத்துப்படி மஞ்சூரியாவிலுள்ள மஞ்சூரியா வாசிகள் அடிக்கடி இத்தகைய குரங்கு மனிதர்களை நேரில் காண்பதாகவும், அவர்களைக் "காட்டு மனிதர்கள்" என அழைப்பதாகவும் தெரிகிறது. 13-ம் நூற்றாண்டில் இத்தாலிய ஆராய்ச்சியாளர் ஒருவர் முதன் முதல் இந்த மனிதக் குரங்கினத்தைக் கண்டு உலகுக்கு அறிவித்ததாகவும் அவர் கூறுகிறார்.

ஸிட்னி அருகில் வாழும் மற்றொரு ரஷ்ய விஞ்ஞானி 3 முறை நிர்வாணமாக ரோமம் அடர்ந்த மனிதக் குரங்கினங்கள் மலைகளில் வசிப்பதை மஞ்சூரியா காடுகளில் கண்டதாகக் கூறுகிறார்.

அதிகாரமெல்லாம் மத்திய சர்க்காரிடம் குவிந்துவிட்டிருப்பது ஆபத்து

மதுரையில் ஆச்சாரியார் பேச்சு

அரசாங்கக் கட்டுப்பாடுகள் குறைவாகவும், தனிப்பட்டவர்கள் உரிமைகள் அதிகமாகவும் இருக்கவேண்டும் என்பதே சுதந்திரா கட்சியின் முக்கிய கொள்கைகள் ஆகும் என்று சுதந்திரா கட்சித் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் 13—9—59 அன்று தெரிவித்தார்.

மதுரை மாவட்ட சுதந்திரா கட்சித் தொண்டர்கள் கூட்டத்தில் பேசிய அவர் நாட்டின் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்திற்குத் தற்போது மதிப்பில்லை என்றும், காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள பெரும்பாலோரின் அபிப்பிராயத்திற்கே மதிப்பளிக்கப்படுகிறதென்றும் தெரிவித்தார்.

நாட்டின் எல்லா அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்திடமே குவிந்து விட்டிருக்கின்றனவென்றும், ஒவ்வொன்றுக்கும் மத்திய அரசாங்கத்தையே பார்க்கவேண்டிய கட்டாய நிலையில் மக்கள் இருக்கிறார்கள் என்றும் நாட்டின் ஏதாவது ஒரு மூலையில் சிறு அபிவிருத்தி வேலை நடக்க வேண்டுமானால் அதற்குத் திட்டக்கமிஷனை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

இத்தகைய நிலைமை ஆபத்தானது என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

நேருவின் உடம்பின் மீதும், மத்திய அரசாங்கத்தின் மீதும் தோன்றியுள்ள கட்டியாகும் சுதந்திரா கட்சி என்றும், நாட்டு மக்களின் அதிருப்தியே கட்டியாக உருப்பெற்றிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

நேருவின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் விலைவாசிகள் ஏற்றத்திற்கும் கிராமங்களில் பெருத்த எதிர்ப்பு இருக்கிறதென்று திரு. என். ஜி. ரங்கா கூறினார். மக்கள்மீது அரசாங்கம் அதிக வரிகளை விதித்திருக்கிறதென்றும், கிராமங்களிலுள்ள மக்களும் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

—“நவ இந்தியா”

பண்டை விளையாட்டுக்கள்

(பேராசிரியர் வித்வான் கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி.எல்.)

உலகக் கவலை, கையாறு அழுங் கல்களிற் சிக்குண்டு, நாளும் ஓடியாடி உழைத்து இளைத்துச் சலிக்கின்ற மக்களுக்கு, அவற்றினின்றும் விடுதலை பெறுவதற்கு விளையாட்டுகள் இன்றியமையாதனவாகும். உடலைக்கட்டுடன் காப்பதற்கும், அறிவைத் தெளிவு பெறச் செம்மை செய்வதற்கும், மனவமைதி பெறுதற்கும், மகிழ்ச்சியடைவதற்கும் விளையாட்டுகள் பெரிதும் துணை புரிகின்றன. விளையாட்டுகளைப் பச்சிளங் குழந்தைகள் முதல் பழுத்துப் பல்விழுந்த கிழவர்கள்வரை விரும்புகின்றனர். உலக மக்கள் அனைவரும் அவாவி நிற்கும் விளையாட்டுகள் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு முறையில் அமைந்திருக்கும். ஒரு நாட்டின் இயற்கைச் சூழல்களுக்கும் வெப்ப தட்பங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தக்கவாறு விளையாட்டுகளும் அமையும். ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தையும் சீரிய பண்பாடுகளையும் அறிவதற்கு, அவர்கள் பழக்கத்திற் கொண்டுள்ள விளையாட்டுகள் பெருஞ் சான்று பகர்வனவாகும்.

தமிழ் மக்களின் பண்டை விளையாட்டுகள் பல இன்னும் வழக்கத்திலிருந்து வருகின்றன. ஒரு சில வழக்கொழிந்தும் போயின. சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றில் பல விளையாடல்களைப் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆனால், அந்த விளையாட்டு முறைகளிற் சில நம்மால் உணர்ந்து கொள்ள முடியாதிருப்பது வருந்தத்தக்கதாகும்.

இக் காலத்தில் நாம் அழும் குழந்தைக்குக் கிலுக்குகளைக் கிலுக்கி ஒலியெழச் செய்து விளையாட்டுக்காட்டி அவர்களைச் சிரிக்கச் செய்கிறோம். கிலுக்கின் ஒலியிலே குழந்தையின் கருத்து கவரப்பட்டு, அது தன் நோயையும் கவலையையும் மறந்து விடுகிறது. கிலுக்கின் காட்சியிலும் ஒலியிலும் அதன் எண்ணம் செல்லத் தொடங்குகிறது. அதனால் குழந்தை பெரிதும் ஆறுதல் அடைகின்றது.

சிறுபாணாற்றுப்படையிலே ஒரு சிறு காட்சியைப் புலவர் நமக்குக் காட்டுகிறார். தென் பாண்டி வளநாட்டின் கொற்கை மாநகரிலே உப்பு வணிகர் தங்கள் குழந்தைகளைச் செல்வமாய் வளர்த்து வந்தனர். குரங்குகளும் குழந்தைகளும் கூடிக் கலந்துவிளையாடின; [illegible] சிறு கிலுப்பையினை [illegible] விளையாடின. கொற்கை [illegible]

குப் பேர்பெற்ற கடற்கரைப் பட்டினம் அல்லவா? அதனால், கிளிஞ்சலின் உள்ளே உயர்ந்த முத்துக்களைப் போட்டு அடைத்துச் செய்த கிலு கிலுப்பைகளைக் கையிற்கொண்டு குழந்தைகளும் குரங்குகளும் விளையாடினவாம்;

"நோன்பகட் டுமணர் ஒழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலு கிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்"

விலை குறைந்த மலிந்த பண்டமாயுள்ள எளிய உப்பை ஊர் ஊர் தோறும் வண்டியில் ஏற்றிச் சென்று விற்று வயிறு பிழைக்கும் உமணர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுகளை எவ்வாறு அமைத்துக் கொடுத்தனர் என்பதை இவ்வடிகள் நமக்கு நன்கு எடுத்துக் கூறுகின்றன. அவர்களின் குழந்தைகள் ஒளிவிடும் அணிகளைப் பூண்டிருந்தனர். அவர்களுக்கு விளையாட்டுக் காட்டுவதற்கு என்று பெண் குரங்குகளையும் கூட வளர்த்தனர்; குரங்குகளையும் குழந்தைகளைப் போல் அன்பாய் வளர்த்தனர்; அவர்கள் விளையாட விலையுயர்ந்த முத்துக்களைச் சிப்பியில் அடைத்து அழகான கிலுக்குகள் செய்து கொடுத்தனர். என்பவற்றையெல்லாம் நாம் படிக்கும் பொழுது அவர்கள் செல்வத்தின் செழிப்பையும், சிறு குழந்தைகளின் விளையாட்டுகளை எவ்வளவு முக்கியமாய் அவர்கள் கருதினர் என்பதையும் நாம் நன்கு அறிகிறோம்.

இரவில் குழந்தைகள் அழுதால் நாம் இன்றும் அம்புலியை அழைத்து விளையாட்டுக் காட்டுகிறோம். தண்மதியின் நல்லொளியைக் கண்டதும் குழந்தைகள் அழுகையை மறந்து அளவிலா மகிழ்ச்சி அடைகின்றன. குழந்தையை இடுப்பிலே எடுத்துக் கொண்டு தாய்மார் அம்புலியை யாட அழைத்துக் கொண்டே பாலுணவை ஊட்டுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதனை அம்புலியாடல் என்பர்.

"புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையில் தீவிய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்

பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணன் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே"

(அகம்—54)

தலை நரைத்துத் தோல் திரைத்த தொண்டு கிழவர்கள் ஊர்ப்பொது அம்பலங்களிலே கூடியிருந்து பொழுது போக்காக நாய்கள் என்னும் வல்லுக்காய்களை வைத்துச் சூதாடிக் கழிப்பார்களாம்:

"......பொதியில்
நரைமூதாளர் நாயிடக் குழிந்த
வல்லின் நல்லகம் . . .

(புறம்—52)

அதோ ஒரு காட்சி! அந்த மன்றத்திலே பாருங்கள், நரைத்து ஆடி நடுங்கும் தலையையுடைய கிழவர்கள், மிக்க ஆழ்ந்த சிந்தனையோடு வல்லுகளை அங்கும் இங்கும் நகட்டி, மனத்திலே சூழ்ந்து விளையாடுகின்ற ஆட்டத்தை:

" . . . . மன்றத்து,
நரைமூ தாளர் அதிர்தலை யிறக்கிக்
கவைமனத் திருத்தும் வல்லு"

(அகம்—377)

இச்சூதாட்டத்தை வட்டுப் பொருவுதல் என்று கூறுவர். சொக்கட்டான், தாயம் என்று இப்பொழுது வழங்குகின்றோம். சூதாடுகருவியைக் கவறு என்றும் வட்டு என்றும் சொல்வர்: சூதாடும் பலகையை வல்லுப் பலகை என்பர்: சூதாடுகளத்தைக் கழகம் என்பர். இவ் விளையாட்டுக்கு வேண்டுங் கைத்தொழில் வெல்லுமாயம் படம் பிடித்தெறிதல். அதனால் ஒவ்வொருவர் கைதேர்ந்தவர்களாய் இருப்பார்கள் இதில் கள்ளத்தனமாய்க் கைகாந்து விளையாடுதலும் உண்டு. அதிலே சச்சரவுகளும் ஏற்படும். சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாளவளத்தான் தாமப்பல் கண்ணனை வெகுண்டு வட்டுக் கொண்டெறிந்த செய்தி புறம்—43-ஆம் பாடலால் தெரிகிறது. இத்தகைய சூது விளையாட்டுகள் தீங்கு பயக்கும் என்று திருக்குறள் கண்டித்திருப்பதும் இங்கே குறித்தல் தகும்:

"கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியா நில்லாகி யார்"

குடுகுடு கிழவராய்த் தள்ளாடிக் கோலூன்றி இருமிக் கொண்டிருக்கும் நிலையிலுங் கூடத் தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் புலவர் தாம் இளமையில் ஆடிய விளையாட்டை இனிக்க நினைத்துத்தவித்துருகுகிறார். அவர் எவ்வாறு விளையாடினராம் தெரியுமா? ஒளிப்பு மறைப்பு அற்ற வஞ்சனையில்லாத இளம் பிள்ளைகளாகச் சேர்ந்து, நீராடுகின்ற இளமகளிருடனே கூடித்தழுவு வழித்தழுவியும் ஆடியும், கரையிலுள்ள பெரிய மருதமரத்தின் கோடுகளில் ஏறி ஆழமான மடுவின் கண் துடுமெனக் குதித்து அடியிலுள்ள மணலை எடுத்து மேலே கிளம்பிவந்து, கரையில் நிற்போருக்குக் காட்டித்தம்முடைய ஆற்றலை வெளிப்படுத்தியும், கல்வியில்லாத இளமைக்காலம் இனிது விளையாட்டிலே கழிந்ததாம். இனி அந்தக் காலம் முதுமையை அடைந்த தமக்கு எங்ஙனம் கிட்டப்போகிறது என்று ஏங்கிப் பாடுகிறார்:

"இனிநினைந் திரக்க மாகின்று திணி மணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிக்க
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய எமக்கே"

(புறம்—243)

சிறுபிள்ளைகள் தரையில் கட்டளையாகக் கோடு கிழித்து அரங்கு இழைத்து, அதில் சிறு ஓட்டுச் சில்லு அல்லது நெல்லிக்காயை வீசியெறிந்தும், உண்டை உருட்டியும் குதித்துத் தாவிக் காலால் செதுக்கித் தள்ளிக் கோட்டில் படாமல் குதித்து விளையாடும் விளையாட்டுக்குப் பாண்டி விளையாட்டு என்பது பெயர். இதோ

ஒரு சிற்றூரின் வேப்பமரத்து தொடாங்காத சிறுவர்கள் நெல்லி நிழலில் இன்னும் கல்வி கற்கத் வட்டாடுவதைக் காண்மின்!

"ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்"

(நற்றிணை—3)

நெல்லி வட்டாடுதல் ஒருவகைக் கோலி விளையாட்டாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. இக் காலத்துக் கோலி விளையாட்டை உண்டை உருட்டுதல் என்று அக்காலத்தில் வழங்கினர் போலும். பரிமேலழகர், வட்டாடலை உண்டை உருட்டல் என்றே வழங்கினர். திருவள்ளுவரும் திருக்குறள் நூலில் "அரங்கின்றி வட்டாடியற்றே" என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் சில உரைகாரர்கள் வட்டாடலைச் சதுரங்கமாகிய சூது விளையாட்டு என்று பொருள் கூறினர். சூதென்னும் முகடி என்று அதனை அறவே வெறுத்தொதுக்கிய திருவள்ளுவர் உவமை வாயிலாக அதனைக் கொண்டுவந்து இங்கே குறிப்பிட்டு வேண்டாவிதமாய் நமக்கு நினைவூட்ட மாட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பழங்காலத்தில் இளைஞர்களுடைய விளையாட்டுகள் எல்லாம் உடல் உறுதி பெறும் வகையிலும், வீரம் உண்டாகும் வகையிலும், உடல் வலிபெற்று அச்சமும் கூச்சமும் அகலும் விதத்திலும், சுறு சுறுப்புடன் எப்பொழுதும் உழைக்கும் விதத்திலும், மனவூக்கத்தை எழுப்பும் முறையிலும் அமையப் பெற்றிருந்தன. அக்காலத்தில் தமிழர் வீரவாழ்க்கையும் விழுப்புணர்வுங் கொண்டு, போரெனிற் புகலும் புனைகழல் மறவர்களாய்த் திகழ்ந்தார்கள்: இளமையிலிருந்தே போருக்கு வேண்டிய பயிற்சிகள் எல்லாம் விளையாட்டாகவே கற்றுக் கொண்டிருந்தார்கள். ஆடவரும் பெண்டிரும் கூடிப் புதுப்புனல் ஆடுதலையும் ஒரு விளையாட்டாகக் கொண்டிருந்தனர். கொல்லேறு தழுவுதல் என்பது உயிருக்கும் உடலுக்கும் கொடிய ஊறு விளைக்கக்கூடிய ஒரு பொல்லாத விளையாட்டு. அதில் மணமாகாத இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் இறங்கி, அடங்காத காளையையும் அடக்கிப் பிடித்துத் தங்கள் உடல் வலியினையும் வளப்பினையும் பிறருக்கு ஐயந்திரிபற எடுத்து விளக்கி அழகான கன்னியரை மணம்செய்து கொள்வது வழக்கம். இதனை முல்லைக் கலிப்பாட்டுகளிற் பாக்கக் காணலாம். மற்றும் யானையேற்றம் (கலித்தொகை—97) குதிரையேற்றம்

(கலித்தொகை—96) தேர்செலுத்துதல் முதலியவற்றையும் விளையாட்டாகவே பழகி மிக்க தேர்ச்சி பெற்றிருந்தார்கள். சிறு குழந்தைகளுக்குக் கூடச் சிறு தேர்களைச் செய்து இழுத்து விளையாடச் செய்து, பின்னர் ஊர்ந்து இன்புறற்கு வழிகோலி யமைத்தனர்போல் தோன்றுகிறது.

"தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல"

(குறுந்தொகை—61)

ஆங்கிலத்தில் Boxing அல்லது Wrestling எனப்படும் குத்துச்சண்டை அல்லது மற்போரையும் தமிழர் ஒரு விளையாட்டாகவே பழகி வந்தனர். பெருநற்கிள்ளி என்னும் சோழவரசன் ஆமூர் மல்லனைப் பொருது அட்டுநின்ற செய்தியைப் புறநானூறு 80ஆம் பாடலிற் காணலாம். அவ்வாறு ஒவ்வொருவருடைய ஆற்றலையும் வலிமையையும் காட்டுவதற்காக நடத்தப்படும் மற்போர்கள் முதலிய விளையாட்டுகள் ஒரு போரவையின் முன்னிலையில் நிகழ்வனவாகும். ஆங்கிலத்தில் Umpires என்று சொல்லப்படும் நடுவர்களே இப்போரவையத்தார் ஆவர். இத்தகைய போரவையின் முன்னர்ப் பொருது வென்றதாலேயே, அச்சோழவரசன் போரவைக்கோ பெருநற்கிள்ளி என்று அழைக்கப்பட்டான் போலும். இவ்வித விளையாட்டுகளை ஆடவரும் பெண்டிருமாய் மக்கள் பெருந்திரளாகக் கூடி வந்து கண்டு களிப்பார்கள். இதைக் குறித்து ஒரு சுவையுள்ள செய்தி அகநானூற்றிற் குறிக்கப்படுகின்றது.

கணையன் என்பவன் வடநாட்டிலிருந்து ஆரியப் பொருநன் என்னும் ஒரு மல்லனை வரவழைத்து, அவன் உடல் வன்மையைக்கண்டு வியந்து கொண்டாடினன். பாணன் என்பவன் ஒரு தமிழ் நாட்டு மல்லன். அகன்ற மார்பும் உயர்ந்த தோள்களும் படைத்தவன். பெருமிதங்கொண்டிருந்த ஆரியப் பொருநன் பாணனை மற்போருக்கு அறைகூவி அழைத்தான். பாணன் தன் தோள்களை எவ்வளவு இறுகப்பற்றிப் பிடித்தாலும், தான் திமிறிக் கொண்டு வெளிவந்து விடுவதாக வீரமொழி புகன்றான் அப்பொருநன். அவ்விதமே, கணையன் முன்னிலையில் இப்போர் நடக்கலுற்றது. பாணன் ஆரியப் பொருநனின் தோள்களைத் தன் இருகைகளாலும் மார்போடு இறுக்கிப் பிணித்துக் கொண்டான். ஆரியப் பொருநன் தன் முழு வலிமையையும் செலுத்தி முயன்று வெளி

வந்தான். எவ்வாறு? பாணன் பிடித்த பிடி நெகிழ்க்கவில்லை. ஆரியப் பொருநன் அவன் எதிரிற் கீழே இருதோளும் அற்று விழுந்து கிடந்தான். அவன் தோள் இரண்டும் பாணனது பிடியிலேயே பொருந்தியிருந்தன. பொருநன் விசையாய் இழுத்துத் தன் வலியைக் காட்டவும், அவன் தோள்கள் பிய்த்துக் கொண்டு விட்டன. தோளற்ற அவனது உடல் தரையில் விழுந்து துடித்தது, அதைக்கண்டு நாணிக் கணையன் தலைகுனிந்தான். பாணனது பிடி உடும்பையும் முதலையையும் வென்று விட்டதென்றே சொல்லலாம்:

"பாணன், மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத்திரள் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணி யாங்கு"

(அகம்—386)

இளம் பருவத்திலிருந்தே தமிழ் மக்கள் இத்தகைய போர்த்தொழில்களைப் பயின்று வந்தார்கள். ஒவ்வோர் ஊரின் பொதுமன்றத்திலும் போர்க்களம் அமைக்கப் பெற்றிருக்கும். அது மரநிழலின் கண் மணல் நிறைத்து வனப்புற அமையப்பெறும். அதை இப்பொழுது கோதாக் குழி என்றும், ஆங்கிலத்தில் Arena என்றும் கூறுகின்றனர். இங்கு போரவையத்தாரின் முன்னிலையில் பயிற்சிகள் நடைபெறும். அவ்வாறு பயிலும் பொழுது கூடப் பெருஞ்சினமும் மறமும் காட்டி புறங்காட்டாது இளைஞர்கள் முனைந்து ஊக்கமாய் விளையாடுவார்களாம்:

"நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ-
திருஞ்செருவி னிகன் மொய்ம்பி னோர்"

என்பது பட்டினப்பாலை. இத்தகைய படைக்கலப் பயிற்சிகளோடு, கோழி, தகர், யானை, பூழ், சிவல், கிளி, பூவை, குதிரை முதலியவற்றை ஒன்றோடொன்று பொரவிட்டும், ஓடவிட்டும், போட்டிகள் நடத்திப் பணயம் வைத்து விளையாடுவதும் உண்டு என்பதைப் புறப் பொருள் வெண்பா மாலை கூறுகிறது. தேர்களையும் வண்டிகளையும் பந்தயத்தில் ஓட்டவிடுவதும், விற்

போர்கள், வாட்போர்கள் நடத்துவதும், யாழ், பாட்டு, கூத்து என்னும் இவைகளிற் போட்டிகள் நடத்துவதும், கூத்தாட்டவைக்குழாங்களில் நாடகங்கள், பாவைக் கூத்துகள் காண்பதுவும் வழக்கமான விளையாட்டுகளாய் இருந்தன. திருவிழாக் காலங்களில் இவை சிறப்பாகக் கொண்டாடப் பெறும். திருநாட்களில் வீரர்கள் கூடித் தத்தம் சேரிகளில் நிகழ்த்தும் விளையாட்டுப் போர்களைச் சேரிப்போர் என்றும் மள்ளர் விழவு என்றும் வழங்குவர். அப்போர்களில் வீரர்கள் புண்களை மார்பிலும் முகத்திலும் விரும்பி ஏற்று மன மகிழ்வர். திருவோணநாளில் மதுரையில் நிகழும் சேரிப்போரைப் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது:

"மாயோன் மேய வோண நன்னாள்
... ...
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறு துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்"

இக்காலத்தும் திருவிழா நாட்களில் சிலம்பம் விளையாட்டுகள் நடக்கின்றன

தமிழ் நாட்டுப் பண்டைய வரலாற்றை நாம் துருவி ஆராயும் பொழுது, பிறர் நாட்டைக்கைக் கொள்ளும் நோக்கம் சிறிதுமின்றித் தங்கள் வலிமையை நிலை நாட்டுவதற்காகவே தமிழ் மன்னர்களும் சிற்றரசர்களும் பெரும் போர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். போர்த் தினவு கொண்டு உடற்றிய சில போர்களில் இருதிறத்தார்களும், ஒருவராவது எஞ்சினார் என்றில்லாமல், அனைவரும் மடிந்தும் போயிருக்கிறார்கள்.

சேரி விழவுகளிலும் திருவிழாக் காலங்களிலும் ஆடவரும் பெண்டிரும் தம்முட் கலந்து, கைகோத்துத் தழுவித் துணங்கையாடுதலும் — குரவையயர்தலும் தமிழ் நாட்டில் பெரு வழக்கிற்றாயிருந்தன. துணங்கை என்பது ஒருவகைக் கூத்து. அதனைச் சிங்கிக் கூத்து என்றும் கூறுவர். "பழுப்புடை யிருகை முடக்கியடிக்கத், துடங்கிய நடையது துணங்கையாகும்" என்று அதன் இலக்கணமும் கூறப்பட்டிருக்கிறது. ஆடவர் மகளிருக்கு முதற்கை கொடுத்து ஆடுவார்களாம். மகளிருடைய துணங்கை நாளும் மள்ளருடைய சேரிப் போரும் ஒன்றாய் நிகழும் என்பது தெரிகிறது.

"வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன வவ்வரைக்

கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் கிவரும் மள்ளர் போரே"

(குறுந்தொகை—364)

ஆடவர் விளையாட்டுகளை விட மகளிரின் விளையாட்டுகளே மிகுதியாகச் சங்க இலக்கியத்திற் காணப்படுகின்றன. அக்காலத்தில் இளமகளிர் யாதொரு கவலையுமின்றி விளையாடுவதே தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பெண் குழந்தைகளை விளையாடவிடாமல் வீட்டினுள் அடைத்து வைப்பது பெரும்பாவம் என்றும் அதனால் செல்வம் தேய்ந்துவிடும் என்றும் கருதினார்கள். இதனை,

"விளையாடாயமொ டோரை யாடா
தினையோ ரில்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனு மன்றே யாக்கமுந் தேய்ம் மெனக்
குறுநுரை சுமந்து நறுமல ருந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண வாடுகம்"

(நற்றிணை—68)

என்பதால் அறியலாம். இளமகளிரைக் குறிக்கும் போதெல்லாம் "ஓரையாயம்" என்றும் "பொய்தன்மகளிர்" என்றும் பாடுகின்றனர். ஓரை என்பது ஒருவகை விளையாட்டு. அது இன்னது என்று நன்றாக விளக்கப்படவில்லை. அது பஞ்சாலாய பாவை கொண்டு மகளிராடும் விளையாட்டு என்று சிலர் கூறுவர்.

மகளிர் ஆடும் விளையாட்டுகள் பலவும் பலராகக் கூடியிருந்து விளையாடுவனவாகும். பெண்களுக்கென அமைந்த விளையாட்டுகள் அவர்களுடைய மெல்லியல் மேனியின் வளர்ச்சிக்கும் எழிலின் எழுச்சிக்கும் ஏற்றபடி இருந்தன. அவர்கள் வயது வந்து இல்லறம் ஏற்றுக் கணவர் உவப்பப் புதல்வர்ப்பயந்து வாழ்க்கையை இனிது நடத்துவதற்குத் தக்க முறையில் பயிற்சியளிக்கும் விளையாட்டுகளே அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. வண்டலயர்தல், சிறு வீடு கட்டுதல், சிறு சோறு சமைத்தல், பாவையாடல் முதலியன இல்லறக் குறிப்புடனேயே இயன்றுள்ளன. இவ்வாடல்களைப் பன்னிரண்டு வயது வரையில் பெண்கள் ஆடி வந்தனர். அவற்றை விளையாட்டாகக் கருதாது, விழவு நோன்பு அயர்வதாகவே கருதி விளையாடினர். அவற்றை உண்மையோடு செய்து வந்தால் நல்ல கணவனை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் நிலவி வந்தது.

பூந்தாதும் பஞ்சும் பட்டும் கொண்டு அழகான பொம்மைகள் செய்து, அவற்றை ஈன்றெடுத்த குழந்தைகளைப் போலப் பேணி

குழமகன், சிறு முத்தன் போன்ற பெயர்களைச்சூட்டி, அவை ஒன்றோடொன்றை மணம் செய்வித்து மண விளையாட்டு நடத்துவதை ஒரு நோன்பு போலக் கொண்டாடினர். இதற்காகப் பல வீடுகளிற் சென்று ஐயம் எடுத்து வந்தும் பிறர்க்கு இட்டு அறத்தைப் பெருக்கினர் :

"பொய்தல் மகளையாய்ப் பிறர்மனை பாடிநீ
எய்திய பலர்க்கீத்த பயம்பயற் கிற்பதோ"
"சிறுமுத் தனைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ
நறுநுத லவரொடு நக்கதுநன் கியைவதோ"

(கலித்தொகை—59)

தாம்வளர்க்கும் பாவைக்கு ஏதாவது சிறு துன்பம் நேரிட்டால் அதைப் பெரிதாகக் கொண்டு தாங்களும் துயருறுவார்களாம் :

"தாதிற் செய்த தண் பனிப் பாவை
காலை வருந்துங் கையாறோம் பென"

(குறுந்தொகை—48)

அச்சிறு பெண்கள் பாவையை மடியில் வைத்துக் காலை நீட்டி இருந்து கொண்டு இதோ பாலூட்டுவதைப் பாருங்கள்!

"உருஅ வறுமுலை மடாஅ
உண்ணாப் பாவையை யூட்டு வோளே"

(ஐங்குறுநூறு—128)

மார்கழி மாதத்தில் இளமகளிர்கள் கூடிப் புலரி விடியலின்கண் நீர்த்துறையை நண்ணி நீராடிப் பாடித்தொழுது நோன்பிருப்பர். இதன் பலன் நல்ல கணவனையடைதலாகும். இதனைத் தை நீராடல் என்றும் அம்பாவாடல் என்றும் கூறுவர் :

"வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையி னீராடிய தவந்தலைப் படுவாயோ"

(கலித்தொகை—59)

சுனையிலும் ஆற்றிலும் கடலிலும் பாய்ந்து நீந்தி ஓடிவிளையாடி, மகளிர் உடற்கட்டுடன் நோயின்றி வாழ்ந்தனர். நுங்கின் நீரும் கரும்பின் சாறும் தெங்கின் இளநீருடனே கலந்து முந்நீருண்டு முந்நீர்ப் பாய்ந்து முழுகியாடினராம். (புறம்—24) அவலை உண்டு, அலை கடற்பாய்ந்தனராம். (புறம்—63) இளமகளிரை நீர்த் துறைக்கண் கண்டுவிட்டால் நண்டுகள் பாடு திண்டாட்டம்தான். அலவனாட்டுதலை ஒரு விளையாட்டாகவே பெண்கள் கொண்டிருந்தனர். பொன்னாலும் பளிங்காலும் கழங்குகள் செய்து அம்மானை விளையாட்டு ஆடினர். நொச்சியும் முல்லையும் வளர்ப்பது ஒரு விளையாட்டு. சிலம்பெதிர் கூவுதலும் ஒரு விளையாட்டு. மலைப் பக்கங்களில் குகைகளின் முன்னால் நின்று கூவியழைத்து எதிரொலி கேட்டு மகிழ்வர். இது மணமான பின்னர்க் கணவன் சொல்லுவதையே தாம் சொல்லி வாழ்க்கை நடத்துவதற்குப் பயிற்சி போன்றமைந்தது :

"நின்மலைச், சிலம்புபோற் கூறுவ கூறும்
இலங்கே ரெல்வளை யிவளுடை நோயே"

(கலித்தொகை—46)

இளம் பெண்கள் மலர்களும் கொய்து தழையுடைகளும் தொடலைகளும் தைத்து உடுத்து விளையாடினர். வேங்கை மரத்தினடியிற் சென்று 'புலி! புலி!' என்று கூப்பிட்டு, வளைந்த கொம்புகளில் மலர் பறித்து விளையாடினர். கும்மி கோலாட்டம் என்றால் ஓரே கும்மாளம்தான். ஊஞ்சல் ஆடுவதில் ஊக்கமாய் முனைந்து நிற்பர். அக்காலத்தில் சந்தன மர உரலிலே முத்து நிறைந்த யானைக் கொம்பால் தினையைக் குத்தி வள்ளைப் பாட்டுப்பாடி விளையாடினர். சிலப்பதிகாரம், அரங்கேற்றுக் காதை உரையில் அடியார்க்கு நல்லார் காட்டிய "சிந்துப் பிழுக்கையுடன்" என்று தொடங்கும் மேற்கோளிற் குறிக்கப்பட்ட பல்வரிக்கூத்துக்கள் பலவற்றுள, திருவாசகத்துட் காணப்படும் அம்மானை, வண்டு (திருக்கோத்தும்பி) தோள் வீச்சு (திருத்தோணோக்கம்) சாழல், உந்தி, அவலிடி (திருப்பொற்சுண்ணம்) கொய் முள்ளிப்பூ (திருப்பூவல்லி), படுபள்ளி (திருப்பள்ளியெழுச்சி), தெள்ளேனம் முதலியன யாவும், பாடிக்கொண்டே மகளிர் ஆடும் விளையாட்டுகள் என்பது தெளிவாகும். இவை போல்வன பண்டைக்காலத்தில் பல்கி யிருந்தனபோலும். கைகோத்தாடும் குரவையைத் தெற்றியாடல் என்றும் கூறுவதுண்டு.

அந்நாளில் ஆடவர் விளையாடாத-மகளிர்க்கே உரித்தாயிருந்த விளையாட்டு ஒன்று உண்டு. அதுதான் பந்து விளையாடுதல். பந்துகள் பட்டுத் துணி கொண்டு நூலால் வரிந்து கட்டப்பட்டுக் கண்கவர் வனப்பினவாய் இருக்கும். சிலம்புகள் கலீர் என்று ஒலிக்கப் பெண்கள் காலால் அடித்துப் பந்து விளையாடுவர். பந்து விளையாட்டு காலுக்கு வலிமை ஊட்டும். கால்சலித்துப் போனால் வீட்டு முன்றிலின் மணலிடத்திலிருந்து கலகல வென்று வளையல் ஒலிக்கக் கழற்காய் ஆடுவர். அம்மானை விளையாட்டு கைகளுக்கு உரம் ஊட்டும் :

"தாமணியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வரன்றேய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்"

(பெரும்பாணாற்றுப் படை)

பண்டைநாளில் பாவையரே பந்து விளையாடு தலைப்பழக்கத்திற் கொண்டிருந்தனர். ஆடவர் விளையாடுவதில்லை. இதற்குச் சான்று யாதெனிற் கூறுவாம்: பாண்டிய மன்னர் மதுரைக்கோட்டை வாயிலிற் பறக்க விட்டிருந்த மீனக் கொடிக்குப் பக்கத்தில் பந்தும் பாவையும் கட்டித் தொங்க விட்டிருந்தனர். "எங்கள் மீதுபகைமை கொண்டு போரில் எதிர்த்துவரும் மடலோர் இருப்பார்களே யானல், அவர்களைப் போரில் முறியடித்து மகளிராக்கிக் கையில் அந்தப் பந்தையும் பாவையையும் கொடுத்து விளையாட விடுவோம்" என்ற எச்சரிக்கையின் அறிகுறியாகவே அவை அங்குக் கட்டப்பட்டிருந்தனவாம். அவ்வாறு யாரும் பகைவர் வாராததால், அவை வாயிலில் தூங்கிக் கொண்டிருந்தனவாம்.

"செருப்புகன்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்"

(திருமுருகாற்றுப்படை)

இதனால் பந்து விளையாடுதற்குரியார் மகளிரே என்பது தெற்றெனப் புலனும். அக்காலத்து மகளிர் பந்து விளையாடிய திறனையெல்லாம் சிலப்பதிகாரம், பெருங்கதை போன்ற நூல்களில் விரிவாகக் காணலாம். எஞ்சாது மேற்கோள்களைக் கூறுவதானல் இக்கட்டுரை ஒரு பெருநூலாக விரியும் என்று அஞ்சி ஒரு சில மேற்கோள்களே தரப்பட்டுள்ளன. இக்கட்டுரையும் விளையாட்டாகவே எழுதப்பட்டது. இதைப் படிப்போர்களும் விளையாட்டாகப் படித்து மகிழ்வார்களாக.

—மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர் 1956

அற்புத மருந்து—தண்ணீர்

ஆலையம்மாவுக்கு வயசு பதினொன்று. ஜலதோஷம் ஏற்படும் போதெல்லாம் அவளுக்கு ஆஸ்த்மா கண்டுவிடும். சமீபத்தில் இப்படி ஆஸ்த்மா கண்ட போது ஓயாமல் இருமிக்கொண்டிருந்தாள். எதையும் சாப்பிடவோ குடிக்கவோ கூட அவளால் முடியவில்லை. ஆலையம்மாவின் தாய் தன் குடும்ப டாக்டரைக் கூப்பிட்டுவரப் போனாள். ஆனல் அவர் யாருக்கோ ஆப்பரேஷன் செய்துகொண்டிருந்தார். வேறு வழி இல்லாமல் கடைசியில் இன்னொரு வைத்தியரை அழைத்து வந்தாள். "ஆலையம்மா சிறிது நேரத்துக்கு ஒருதரம் கொஞ்சம் தண்ணீர் குடித்து வருவது நல்லது" என்றார் அவர். குடும்ப டாக்டர் வருகிற வரை அப்படியே செய்துவரும்படி ஆலையம்மாவிடம் சொன்னாள் அவளுடைய தாய். ஒரு மணிநேரத்துக்கெல்லாம் ஆலையம்மாவின் இருமல் நின்றுவிட்டது.

இரண்டு வயசுக் குழந்தை ஜகதீசனுக்குப் பகல் முழுவதும் ஜுரம். சாயங்காலம் ஜுரவேகம் அதிகமாயிற்று. குழந்தைக்கு இருப்புக்கொள்ளவில்லை. டாக்டர் வந்து எனிமா கொடுத்தார்; வயிற்றிலிருந்த மலம் நீங்கிய சற்று நேரத்துக்கெல்லாம் குழந்தை நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்து விட்டான்.

தண்ணீரைப் போன்ற சாதாரண வஸ்து இவ்வளவு எளிதில் குணம் தருகிறதென்றால், ஆச்சரியமாக இல்லையா? நோய், காயம் இவைகளுக்கு அன்றாடம் சிகிச்சை செய்கிறாரே உங்கள் டாக்டர், அவர் இப்படி ஏதாவது ஒரு விதத்தில் தண்ணீரைப் பயன் படுத்துவது சகஜம். தண்ணீர் இல்லாவிட்டால் சில நாளில் நாம் வாடிவற்றி இறந்துபோய்விடுவோம்; நீர் இன்றி உடலுக்கு மருந்து கொடுத்தாலும் பயன் இல்லை; ரணசிகிச்சை செய்தாலும் உயிருக்கே ஆபத்தாகி விபரீதமான பலனே ஏற்படும்.

புதிதாக வந்திருக்கும் அற்புத மருந்து வகையைக் கண்டு ஏற்பட்ட உற்சாகத்தில், சாதாரண ஜுரம் வந்தால், "இப்படிக் கைகண்ட அற்புத மருந்துகள் தான் உண்டே; முற்றினால் கவனித்துக் கொள்ளலாம்" என்று அசட்டுத் தைரியத்தோடு இருந்து விடுகிறோம். சில சமயம் ஜலதோஷம், மார்ச்சளி, வயிற்றுக் கோளாறு இவைகளைப்பற்றி அக்கறைப்படுவதில்லை. வீட்டில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டால் நோயை எதிர்த்துச் சமாளிக்க முடியும். ஆனல் அதற்கு மாறாக நாம் பிடிவாதமாய் வேலைக்குப் போய் வருகிறோம்; உடல்நிலை கெட்டு விடுகிறது. நம்மோடு பழகுபவர்களுக்கெல்லாம் அந்த நோய் தொத்தும்படி நடந்துகொள்கி

றோம். படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டு நீராகாரம் உட்கொண்டால் உடம்புக்கு நல்லது. இதனால் நம்மைப் பீடிக்கும் நோய் விரைவில் நீங்கும்; பிராங்கைட்டிஸ், சினுஸைட்டிஸ் போன்ற நோய்களும் அண்ட மாட்டா. 'ஜல தோஷம் முற்றினால் டாக்டரிடம் போனால் போகிறது' என்பது நம் சித்தாந்தம்.

அநேகம் பேர், "இந்த மாதிரியெல்லாம் அவதிப்படுவானேன்? ஓர் ஊசி போட்டுக்கொண்டால் ஒரே நாளில் தீர்ந்துவிடுகிறது" என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். டாக்டர், "உங்களுக்கு லேசாக ஜலதோஷம் கண்டிருக்கிறது. கொடுக்கிற மாற்று மருந்து உடம்பைப் பாதிக்கலாம்; ஆகவே, ஒன்றும் கொடுக்காமலே இருக்கிறேன். ஆனால் படுத்து மட்டும் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்; நிறைய நீராகாரமாகச் சாப்பிடுங்கள்" என்று சொன்னால் சில நோயாளிகளுக்குக் கோபம் வந்துவிடும்.

அற்புத மருந்துகள் என்று வழங்குபவற்றை வெகு நாளைய அநுபவத்தைக் கொண்டு தீர யோசித்துப் பார்த்துத் தான் வைத்தியர்கள் கொடுப்பார்கள் என்பது அந்த மாதிரி நோயாளிகளுக்குத் தெரிகிறதில்லை. இப்படி மாற்று மருந்து கொடுத்தாலும் நீராகாரம் அவசியந்தான்.

இரண்டு விதத்தில் நம் உடம்புக்கு நீர் கிடைத்து வருகிறது. முதல் வகை: நாம் உட்கொள்ளும் உணவு, நீராகாரம் இவைகளிலிருந்துதான் இப்படி மிகுதியாகக் கிடைக்கிறது. நம் உணவில் ஒரு பாதி நீர் தான். உதாரணமாக, தக்காளிப் பழத்தில் 94·3 சத வீதமும், ஆப்பிளில் 84·9 சத வீதமும், மாட்டிறைச்சியில் 73·8 சத வீதமும், ரொட்டியில் 35·3 சத வீதமும் வெறும் நீர் தான். இரண்டாம் வகை: நம் உடம்புக்குள்ளேயே சுரக்கும் நீர். ரசாயன மாறுதலின் பயனாக இப்படி உடலிலேயே இடைவிடாமல் நீர் உற்பத்தியாகிறது. நம் உணவில் உள்ள ஹைட்ரஜன் (ஜலப் பொருள்) ஏற்கனவே உடலினுள் மூலக்கூறு (மாலெக்யூல்) களிலுள்ள ஆக்ஸிஜ (பிராணவாயுவி)னுடனோ வெளியிலிருந்து வரும் ஆக்ஸிஜனோடோ கலக்கிறது. இதன் விளைவாக நீர் உற்பத்தியாகிறது. 24 மணி நேரத்துக்கு ஒரு பைண்ட் நீர் இப்படிச் சுரக்கிறது.

இந்த நீர் தொடர்ந்து நம் முடலை விட்டு ஏதாவது ஓர் உருவில் வெளியேறி வருகிறது. மூத்திரப் பை ஒழுங்காக வேலை செய்ய வேண்டுமானால் ஒரு பைண்டிலிருந்து $1\frac{1}{2}$ பைண்ட் அளவு நீர் இருக்கவேண்டியது அவசியம். உடம்பில் உஷ்ணம் சரிவர இருந்து வருவதற்கும் பின்னும் அதிக அளவு நீர் அவசியம். எந்தநேரமும் உட்கார்ந்தபடி வேலை செய்கிறவர்களின் உடலிலிருந்து சருமத்தின் வழியாகவும் சுவாசக் குழாய் மூலமும்

இரண்டு குவார்ட் அளவு நீர் வற்றி வெளியேறிவிடும். உஷ்ணப் பிரதேசத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளியின் உடல் நிலை சரியாக இருக்க வேண்டுமானால் 5 குவார்ட் அளவு நீர் அவனுடைய உடலிலிருந்து வெளியேற வேண்டும். 70 டிகிரி உஷ்ணமுள்ள அறையில் கம்மென்று பட்டினி கிடக்கும் ஆசாமியின் உடம்பிலிருந்து கூட $1\frac{1}{2}$ பைண்ட் அளவு நீர் வற்றி வெளியேறிவிடும். நமக்குக் கிட்டும் நீரின் அளவைவிட மிகுதியாக நம் உடம்பிலிருந்து நீர் வெளியேறினால் உடல் வற்றிவிடும். இதனால் காய்ச்சல் ஏற்படும். மூத்திரப் பை சரிவர வேலை செய்வதில்லை; மூத்திரம் சற்று இறுகி விடுகிறது. நாக்கும் உதடும் உலர்ந்து விடுகின்றன.

இப்படி வீட்டில் சகஜமாக வரும் காய்ச்சல்கள் அதிகமானால் பசி மந்தித்துவிடும். வழக்கம் போல் சாப்பிட மாட்டோம்; நீராகாரமும் குறைந்துவிடுகிறது. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் நீராகாரம் அவசியம்; ஆகவே அதையே மிகுதியாக உட்கொள்ளவேண்டும்.

காய்ச்சலாகக் கிடப்பதிலோ, வேலை நேரம் வீண் போவதிலோ, பிறருக்கு ஒரு சுமையாக இருப்பதிலோ நமக்கு மகிழ்ச்சியா என்ன? அதெல்லாம் இல்லை. இன்னும் கேட்டால், இப்படிப் பணம் செலவழிவது நமக்கே பிடிக்கவில்லை. தேவையான அளவு நீரோ, பழ ரசமோ உட்கொண்டால் நாமே ஆச்சரிப்படும்படி உடம்பு விரைவில் குணமாகிவிடும்.

அநாவசியமான சிக்கல்களும் ஏற்பட மாட்டா; அதிக அளவுக்கு மருந்தும் உட்கொள்ள வேண்டியிராது. காய்ச்சலாகக் கிடக்கும்போது நீர் சாப்பிடுவதென்றால் யாருக்கும் தமாஷாகப் படாது என்பது உண்மைதான். நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இதுதான் சிக்கனமான வழி; கைமேல் பலனும் உண்டு. இதனால், 'குடிக்க மறந்துவிட்டேன்', 'வாந்திக்கு வரும்போல் இருக்கிறது' என்று சாக்குப் போக்குச் சொல்லத் தொடங்கி விடுவோம். குழந்தைக்கு இப்படி வெறும் நீர் கொடுப்பதென்றால் தாயார் பாடு சிரமந்தான். இத்தனை மணிநேரத்தில் இவ்வளவு நீர் பருகவேண்டும் என்று ஒரு பாத்திரத்தில் அளந்து வைத்துக்கொள்ளலாம். கடிகாரத்தில் அலாரம் அடிக்கும்போதோ, ரேடியோவில் மணி அடிக்கும் போதோ, வேறு வகையிலோ இது நீர் பருக வேண்டிய நேரம் என்று தெரிந்து கொண்டு அப்போதப்போது ஒரு டம்ளர் நீர் பருகலாம்.

ஆற அமர்ந்து, "இனி நீங்கள் சில நாள் வரையில் நிறைய நீராகாரமாகச் சாப்பிடவேண்டும். அதற்குக் காரணம் என்ன தெரியுமா?" என்றெல்லாம் விவரமாகச் சொல்ல நம் டாக்டர்

களுக்கு நேரம் இராது: அவர்களுக்கோ பல அலுவல்கள். வைத்தியம் செய்துகொள்ள அவர்களைத் தேடி நாம் வந்திருப்பதால், அவர்கள் சொல்கிறபடி நாம் நடப்போம் என்று கருத வேண்டியிருக்கிறது. இந்த உத்தரவுக்கு நோயாளிகள் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்ய நர்சுகளுக்குத் தெரியும்.

அநேகம் பேருக்கு - முக்கியமாகக் குழந்தைகளுக்கு - ஜுரம் வரும்போல் இருந்தால், தாகம் எடுப்பது சகஜம். ஒரே சமயத்தில் அதிக அளவு நீர் பருகினால் வாந்தி எடுக்க வரும். திரவ உணவு ஏதாவது கொடுத்தாலே போதும். "நீராகாரம் கொடுத்து வரவேண்டும்" என்று டாக்டர் சொன்னால் (சாராய வகையைத் தவிர எந்தத் திரவ உணவு வாய்க்குப் பிடித்திருந்தாலும் சாப்பிடலாம். துருவின 'ஐஸ்' (குறைந்த அளவில்) ஆக இருந்தாலும் சரி, குழம்பு, பழ ரசம் போன்ற திரவமாக இருந்தாலும் சரி, சாப்பிடலாம்; கொஞ்ச நாளைக்குக் கன ஆகாரமே தேவையில்லை. வயிறு, குடல் பற்றிய கடுமையான தொற்று நோய்களுக்கு உடனடியாக டாக்டரை அழைத்துக் காட்டுவது நல்லது. வாந்தி எடுத்தால் உடம்பிலுள்ள நீர் விரைவில் வெளியேறி விடுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கண்ட உணவும் சாப்பிட்டால் குடல் பகுதியில் பின்னும் பாதகம் ஏற்படும். ஆகவே, டாக்டர் வந்து பார்த்து இன்ன உணவுதான் சாப்பிடவேண்டும் என்று சொல்லும் வரையில் திரவ உணவே உட்கொள்ள வேண்டும்; ஆனால் கொழுப்புப் பொருள் அடங்கிய திரவம் எதையும் சாப்பிடக்கூடாது; பாலை அவசியம் விலக்க வேண்டும். குறைந்த அளவில் ஆப்பிள் சாறு உட்கொள்ளலாம். டாக்டர் வந்து பார்த்துச் சொல்லும் வரையில் கன உணவுமட்டும் சாப்பிட வேண்டாம்.

—"மஞ்சரி"

அறிவுக்கு உணவு

அனுபவம் ஓர் மணிவிளக்கு. அதன் ஒளியால் காட்டப்படும் வழியில்தான் நான் என்றென்றும் நடப்பது வாடிக்கை. அதைவிடச் சிறந்தவழி வேறு ஏது?

—**பாட்ரிக் ஹென்றி**

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பது — இந்த உயர் பண்பு மட்டும் இல்லாவிட்டால் உலகத்தில் எந்த அரசாங்கமும், எந்த அமைப்பும், எந்த நற்செயலும், எந்த இன்பமும் இருக்கமுடியாது. ஆம், வாழ்க்கை வாழ்க்கையாகவே இருக்காது.

—**எட்மண்ட் பர்க்**

மிக அதிகமான மக்களுக்கு மிக அதிகமான மகிழ்ச்சியைத் தருவது எதுவோ அதுவே மிகச் சிறந்த செயல்-**பிரான்சிஸ் ஹட்சிகன்**

வெள்ளெழுத்து

பழைய நாட்களில், தமிழகத்தில், வயது ஏற ஏறக் கண் பார்வை மழுங்கிப் போதலை வெள்ளெழுத்து என்று குறிப்பிட்டு வந்தனர்.

பார்வை மழுங்கிய கண்ணுக்கு, எழுதப்பட்ட எழுத்துக்களெல்லாம் தெளிவாகப் புலப்படாமல், ஒரே வெள்ளையாகத் தோன்றுமாதலால், அப்படி ஏற்படும் தன்மையை வெள்ளெழுத்து என்று குறிப்பிட்டனர் போலும்.

கண் பார்வை மழுங்குவதும், அந்தக் குறைபாட்டை நீக்கிக் கொள்ள மூக்குக்கண்ணாடி அணிந்துகொள்வதும், இற்றைக் கால நாகரிகத்தின் கொடிய விளைவுகளாகும் என்றும், பண்டைக்காலங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகளுக்கு அறவே இடமில்லை என்றும் பலர் தவறாகக் கருதிக்கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கிறார்கள்.

கண் பார்வை மழுங்குவது என்பது, எல்லாக் காலங்களிலும் இருந்துவரும் ஒன்றேயாகும். பண்டைக்காலங்களைவிட இற்றைக்காலத்தில் உற்றுநோக்கும் வேலைகள் கண்ணுக்கு மிகவாக ஏற்படுவதாலும், தாக்கும் மின்னொளிக் கதிர்களை எதிர்நோக்க வேண்டிய இன்றியமையாமை கண்ணுக்குப் பெரும் பொழுது ஏற்பட்டு விடுகின்றபடியாலும், பார்வை விரைவில் மழுங்குவதற்கான வழி ஏற்பட்டு விடுகிறது. பண்டைக்காலத்தில், ஓயாமல் உற்று நோக்கிச் செய்ய வேண்டிய வேலைகள் மிகமிகக் குறைவு; அது மட்டுமல்லாமல், பெரும் பொழுது குளிர்ச்சியான இயற்கைக் காட்சிகளைக் கண்டு கொண்டிருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். ஆகையாலே கண் பார்வை மழுங்குவது சிறிது காலங்கடந்து அவர்களுக்கெல்லாம் வந்தது. அவ்வளவுதானே ஒழிய, எவ்வளவு வயதானாலும் பார்வை அறவே மழுங்கவில்லை என்று கூறுவதற்கில்லை. இந் நாட்களில் எந்த வயதில் கண் எவ்வளவுதான் மழுங்கிப் போனதாக இருந்தாலும், அந்தக் குறைபாட்டை எளிதில் நீக்குவதற்கான மருத்துவ சிகிச்சைகளும், மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளும் முறையும் ஏற்பட்டு விட்டன. பண்டை நாட்களில் கண் மழுங்கினால் மழுங்கினதுதான்; அந்தக் குறைபாட்டை அவ்வளவு எளிதில் நீக்கிக் கொள்ள முடிந்ததில்லை. பண்டை நாட்களிலும் நாற்பது அல்லது ஐம்பது வயதானவுடன் எல்லோர்க்கும் வெள்ளெழுத்து ஏற்படவே செய்திருக்கிறது. அப்படி வெள்ளெழுத்து ஏற்படும்போது பிறரைக் கொண்டு படிக்கச் சொல்லுதல்—எழுதச் சொல்

தல்—அறிந்து சொல்லச் சொல்லுதல்—தெரிந்து செய்யச் சொல்லுதல் போன்ற முறைகளின்மூலம் வாழ்நாட்களைக் கடத்தி வந்திருக்கின்றனர். எழுபது, எண்பது, தொண்ணூறு, நூறு என்று வயது ஏறும்போது பெரும்பாலோர் குருடர்களாகத்தான் உலாவி யிருந்திருக்கின்றார்கள்.

பண்டைக்காலங்களில் எல்லா நாடுகளிலுமுள்ள பெரும்புலவர்களும், எழுத்தாளர்களும் தங்களுடைய வயதான காலத்தில் பிறரைக் கொண்டுதான் எழுதியும் படித்தும் வந்திருக்கின்றனர்.

பண்டைக்காலத்தில் பார்வையைப் பெறுவதற்குக், குறிப்பிட்ட சில பேர்போனவர்கள் பல பல முறைகளைக் கையாண்டு பார்த்திருக்கின்றனர்.

உரோம் நாட்டுப் பேரரசனை நீரோ கண் பார்வை இழந்த போது, சர்க்கசு வேடிக்கைகளையும் விளையாட்டுக்களையும் ஒரு பெரிய பச்சைக் கல்லின் மூலம் பார்த்து மகிழ்ந்திருக்கிறான். குறைந்த கண்பார்வையை, அந்தப் பச்சைக்கல், கண்ணாடி போலிருந்து நிறைவு செய்து தந்திருக்கிறது.

மேரியா அந்தாய்னித்தே என்ற பிரெஞ்சு நாட்டுப் பேரரசி தன் கண்பார்வை மழுங்கியதைச் சரிசெய்துகொள்ள, ஒரு கண்ணாடிக் கல்லைத் தன் விசிறியிலே பொருத்தி வைத்துக் கொண்டு, அதன்மூலம் நன்கு பார்த்துக் கொண்டாளாம்.

மூக்குக் கண்ணாடி கண்டு பிடிப்பதற்கு முன்னால், சிறிது கண்பார்வை மழுங்கியவுடன், கண் அடியோடு கெட்டுப்போய்க் குருடாகி விடுவோமோ என்ற அச்சம் பண்டை நாட்களில் எல்லோர்க்கும் எங்கும் இருந்தே வந்திருக்கிறது.

வலிவு குறைந்தவை, மருத்துவ சிகிச்சை செய்யப்பெறாதவை, மிகுதியான வேலைக்கு ஆளானவை போன்ற கண்கள் விரைவில் பார்வையிழந்து விடுகின்றன. படித்தல், எழுதுதல் போன்ற வேலைகளில் மிகுதியாக ஈடுபட்டிருக்கும் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், ஓவியர்கள், சிற்பிகள் ஆகிய இவர் போன்றவர்கள் விரைவில் பார்வையை இழந்துவிட நேரிடுகிறது.

கிரேக்க நாட்டுப் பெரும் புலவனை ஓமரும் (Homer), ஆங்கில நாட்டுப் பெரும்புலவனை மில்டனும் (Milton) தத்தம் வாழ்க்கையின் பிற்பகுதியைக் குருடர்களாக இருந்தே கழித்தனர். சியார்சு பெடரிக் ஆண்டல் (George Frederick Handel), சொகன் செபாசிடியன் பாச்சு (Johann Sebastian Bach) ஆகிய இரண்டு பெரிய பாட்டு இயற்றும் கவிஞர்களும் சிறு வயதிலேயே கண்பார்வையை இழந்தனர்.

தமிழகத்தில்கூட இரட்டையரிலே ஒருவரும், அந்தகக் கவி வீரராகவமுதலியாரும் கண்பார்

(35–ம் பக்கம் பார்க்க)

நகைச்சுவைச் செய்திகள்

[தொகுத்தவர் :—**அன்புப்பழம் நீ**]

உத்தியோக யோக்கியதை :

டைப் அடிக்கும் குமஸ்தாக்கள் தேவை என்று ஓர் அலுவலகத்தார் விளம்பரம் செய்திருந்தார்கள். ஓர் இளைஞன் அந்த அலுவலகத்துக்குள்ளே நுழைந்தான். அலுவலக நிர்வாகிகள் அவனை அன்பாக வரவேற்று, " இதற்குமுன் நீங்கள் எங்கேயாவது டைப்பிஸ்டாக இருந்திருக்கின்றீர்களா?"என்று கேட்டார்.

" இல்லை. அப்பாவுக்கு ஒத்தாசையாக இருக்கிறேன்."

"அப்படியா? நிரம்ப மகிழ்ச்சி. அவருடைய வியாபாரக் கடிதப் போக்குவரத்துகளை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா ?"

" இல்லை என் அப்பாவுக்கு வியாபாரம் எதுவும் இல்லை. அவருக்கு விவசாயம்தான் தொழில்."

" விவசாயக் கணக்குகளைக் கவனித்து வந்தீர்களாக்கும் ?

" இல்லை, ஏர் பிடித்து உழுது கொண்டிருந்தேன்."

" ஹூம் அப்படியா? பாதகம் இல்லை. ஏர் பிடித்த விரல்கள் தான் உறுதியாய் இருக்கும். நல்லது. நீங்கள் தொழிற் பள்ளியிலே படித்ததுண்டா ?"

" இல்லையே !"

" ஓகோ ! நீங்களாகவே டைப் அடிக்கப் பழகிக்கொண்டீர்களா ? அதுதான் கெட்டிக்காரத்தனம்."

"இல்லை, எனக்கு டைப் அடிக்க வராது."

" வாரதா ? ஹூம் நல்லது. இங்கே கற்றுக்கொள்ளலாம். எங்களுக்கு டைப்பிஸ்டுகள் நிரம்ப அவசியம். அதோ டைப் ரைட்டிங் மெஷின் இருக்கிறது. அங்கே உட்கார்ந்திருங்கள். வருகிறேன்."

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

வையை இழந்த நிலையிலேயே செய்யுட்கள் இயற்றினர். அந்த நாட்களில் கண்பார்வை இழந்த நிலையிலும் பணியாற்ற முடிந்தவர்களும் — முன்வந்தவர்களும் மிகமிகச் சிலரேயாவர்.

இந்த நாட்களில் மூக்குக் கண்ணாடி வந்து பெரும்பாலான சான்றோர்களையும், வல்லுநர்களையும் உலகத்திற்குக் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறது. இல்லையாயின் **வெள்ளெழுத்து** என்னும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுப் பல சான்றோர்கள், போதுமான அளவுக்கு உலகத்திற்குப் பயன் படாமல் போயிருந்திருப்பார்கள்!

—" **மன்றம்** "

"எது டைப்ரைட்டிங் மெஷின்?" என்று கேட்டானும் அந்த வாலிபன்.

குழந்தையின் கேள்விகள் :

லண்டனில் மூன்றரை வயதுள்ள ஓர் குழந்தை தன்னுடைய தாயாரை கீழே கண்ட கேள்விகளைக் கேட்டதாம். (உண்மையாக நடந்த நிகழ்ச்சி.)

1. ரொம்ப தூரம் என்பது எங்கே இருக்கிறது?

2. தலை வெட்டிகளின் தோற்றம் எப்படி இருக்கும்?

3. ஈக்கள் வசிப்பது எங்கே?

4. ரொம்பப் பெரிசு என்பது எப்படி யிருக்கும்?

5. காற்று உண்டாவது எப்படி?

6. நேற்று இரவு என்பது எப்பொழுது வரும்?

7. மழை தூங்குகிறதா?

8. வாயிலிருந்து வார்த்தைகளை வரும்படி செய்வது எது?

9. நீ சிறு பெண்ணா இருந்தபொழுது என்னை யார் பார்த்துக் கொண்டா அம்மா?

10. கொசு என்ன பலகாரம் சாப்பிடுகிறது?

11. கண் இமைகளைக் கொட்டச் செய்வது எலும்புகளா?

12. என் கண்களுக்குப் பின்னால் என்ன இருக்கிறது?

13. சாமான்கள் கீழே விழுந்தால் ஏன் உடைந்துபோகின்றன?

14. ஆகாயம் எவ்வளவு உயரத்திலிருக்கிறது? அங்குபோக எவ்வளவு உயர ஏணி வேணும்?

பெருக்க வருவாள் !

"நான் வெளித் திண்ணையிலே படுத்துக்கொள்ளுகிறேன். காற்று நன்றாக வருகிறது. சுருக்க எழுந்து விடலாம்" என்றார் நண்பர்.

"ஆம் நீங்கள் சுருக்க எழுந்திருக்கத்தான் வேண்டும் இல்லாவிட்டால் வேலைக்காரி பெருக்க வந்துவிடுவாள்" என்றார் புலவர்.

கழுதையும் குதிரையும் :

உலகமேதை பெர்னார்ட்ஷாவுக்கு ஒருநாள் கடிதம் வந்திருந்தது. அது பின்வருமாறு :—

"நீங்கள் மிகவும் சிறந்த கதைகளை எழுதுகிறீர்கள். நானும் ஓர் எழுத்தாளன். நாம் இருவரும் சேர்ந்து கதைகளை எழுதினால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" அதற்கு ஷா எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

"எங்காவது குதிரையும் கழுதையும் ஒன்றாக முடியுமா?

—ஷா

இதற்கு ஷாவுக்குக் கிடைத்த பதில் கடிதத்தில் கண்டிருந்ததாவது- "ஏன் முடியாது?"

—குதிரை.

அதிசயமான வேலை நிறுத்தம்

உலகத்தில் எல்லா இடங்களிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதுபோல சிசிலி என்ற சின்னஞ் சிறு தீவிலும் நடைபெற்றது. அங்கே பாலர்மோ நகரில் குப்பைத் தொட்டிகளைச் சுத்தம் பண்ணும் நகரசுத்தித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஒன்று நடந்தது. அந்த வேலை நிறுத்தத்தின்போது நகரசுத்தித் தொழிலாளர்கள் கடைப்பிடித்த ஓர் உபாயம்தான் மிகவும் ஆச்சரியமானது. அதாவது அவர்கள் முதல் நாள் தாங்கள் குப்பைத் தொட்டிகளிலிருந்து அப்புறப்படுத்திய குப்பைக் கூளங்களை எல்லாம் வேலை நிறுத்தத்தன்று பழையபடியும் குப்பைத் தொட்டிகளில் கொண்டு வந்துபோட்டுவிட்டார்கள். கடைசியில் அவர்கள் வேலை நிறுத்தத்தில் வெற்றி பெற்றுச் சம்பள உயர்வும் பெற்றார்கள்.

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலே இருந்தார். யார் தன்னைச் சொல்கொண்டு பொசுக்கினாரோ, அவரையே ஒரு பொறுப்பான இடத்தில் வைத்ததன் மூலம், அவர் தன்னை ஒரு உன்னத இடத்திலே இருத்திக் கொண்டார்! லிங்கனை, இது பற்றிக் கேட்டபோது, அவர் சொன்னாராம், "ஸ்டாண்டன் என்னைத்தான் அவமானப்படுத்தினார்; ஆனால் அவருடைய மூளை பலம், என் நாட்டுக்குத் தேவை. நாட்டுக்குச் சேவை செய்யும் இடத்தில் நானிருக்கிறேன். என் சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக்கொள்ள அல்ல நான் இந்தப் பதவியிலிருப்பது."

இப்படிப்பட்ட அருமையான பெருந்தன்மையைக் கொண்டிருந்ததால்தான், இன்று உலகமெல்லாம் அவர் புகழ்பாடுகிறது; அவர் நினைவைக் கொண்டாடுகிறது.

1809-ல் பிறந்தார் அவர். சென்ற பிப்ரவரி மாதத்தில் உலகெல்லாம், அவருடைய 150-வது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

நிறவெறியை வேரறுக்கத் தன்னையே துப்பாக்கிக் குண்டுகளுக்குத் தத்தம் செய்த மாவீரர் லிங்கன். அவரைப் பற்றி அறிவியக்கவாதிகள் நமது நாட்டில் நெடுங்காலமாகவே பேசி வருகிறார்கள். ஆபிரகாம்லிங்கனுடைய பெயர் நமக்கெல்லாம் ஒரு விடிவிளக்காகும்!

சாதாரணமானதுகள் என்று ஒரு நல்ல இலட்சியத்துக்காக உழைப்போரைக் கருதலாம்பலர். கண்டிக்கலாம்—ஏசலாம்! எனினும், உத்தமமான இலட்சியமும், அந்த இலட்சியத்தைச் சாதிப்பதில் அவர்கள்கொள்ளும் பொது உள்ளமும், எத்தகைய வெற்றியைத் தேடித்தரும் என்பதையே லிங்கனுடைய வாழ்க்கை உலகுக்கு உணர்த்துகிறது!!

—"திராவிட நாடு"

வெறுப்பை வளர்க்கும் சொற்கள்

(டாக்டர் மு. வரதராசனார்)

புதியதாய்த் தோன்றி வளர்ந்து வரும் மொழிக்கும் பழையதாய்ப் பண்பட்டு விளங்கும் மொழிக்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. புதிய மொழி தயங்காமல் சொற்களைக் கடன் வாங்கும். பழைய மொழி அப்படிச் செய்யாது. வேறுவழியே இல்லாத போதுதான் ஒன்று இரண்டு சொற்களைப் பழைய மொழி கடன் வாங்கும்.

இந்த வேறுபாட்டை மறந்துவிட்டு எந்தத் துறையிலும் மொழிச் சீர்திருத்தம் செய்ய முன்வரக் கூடாது. உண்மையை உணராமல் மொழித்துறையில் கை வைக்கக் கூடாது. அவ்வாறு செய்வது, அந்தப் பழைய மொழியைப் பேசும் மக்களிடையே வெறுப்புணர்ச்சியையும் பகையையுமே வளர்க்கும்.

வடமொழி படித்தவர்கள், எந்தத் திசையில் சென்றாலும் அந்தத் திசையில் இருந்த மொழியில் வட சொற்களைத் தயங்காமல் —தாராளமாகக் — கலந்தார்கள். அவர்களின் முயற்சி, சென்ற திசைகளில் எல்லாம் வெற்றியே தந்தது. தெலுங்கில், கன்னடத்தில், மராத்தியில், வங்காளத்தில் இவ்வாறு செய்யப்பட்ட கலப்புகள் ஏராளம். அந்தந்த மொழியினரும் அவற்றை ஏற்றுக்கொண்டார்கள். காரணம், அந்த மொழிகள் காலத்தால் பிந்தியவை; இலக்கியப் பண்பாடு இல்லாமல் இருந்தவை. அதனால் வட மொழி அறிஞர்கள் புதியனவாகப் புகுத்தியபோது அவை எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஒரே இடத்தில் மட்டும் வடமொழி அறிஞர்கள் வெற்றிபெற முடியவில்லை. தோல்வியே உற்றார்கள். அந்த இடம் எது? அது தான் தமிழ். தமிழில் வட சொற்களை நிரம்பக் கலந்தும், வட எழுத்துக்களை விரவியும் எழுத முற்பட்டார்கள். அந்த நடைக்கு மணிப் பிரவாளம் என்று பெயரிட்டு அழகு படுத்தினார்கள். பெரியவர்கள் சிலருடைய ஆதரவும் அதற்குக் கிடைத்தது. ஆனாலும் முயற்சி தோற்றது. மணிப்பிரவாளம் இன்று இருக்கும் இடம் தெரியவில்லை. வடமொழி கற்ற அறிஞர்கள், வட மொழியை ஒட்டியே தமிழுக்கு இலக்கணம் எழுதத் தொடங்கினார்கள். அந்த முயற்சியும் தோற்றது. வீர சோழியம் என்னும் இலக்கண நூல் அவ்வாறு எழுதப்பட்டது. அதற்கு இன்று வாழ்வே இல்லை. அதை அதன் பெயரை நினைவில் வைத்திருப்பவரும் மிக மிகச் சிலரே. பிறகு வட சொற்களை உருமாற்றி அழகுபடக் கலந்து எழுதும் முயற்சி தோன்றியது. அந்த முயற்சியும் தோற்றது. தமிழ்ச் சொற்கள் கிடைத்த இடங்களிலும் அழகுக்காக என்று வட சொற்களைப் புகுத்தி எழுதும் முறை இந்த நூற்றாண்டிலும் செய்தித் தாள்களிலும் கதை முதலியன எழுதுவோரிடத்திலும் இருந்து வந்தது. அந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. அவர்களே இப்போது வட சொற்களைக் குறைத்து எழுதி வருகின்றனர்.

மற்ற மொழிகளில் எல்லாம் வட மொழியார் பெற்று வந்த வெற்றியைத் தமிழில்பெற முடியாமற் போனதற்குக் காரணம் என்ன? மற்ற மொழிகள் புதியன; இலக்கியப் பண்பாடு இல்லாதிருந்தவை. தமிழோ மிகப் பழையதாய் இலக்கிய வளத்தோடு பண்பட்டு வந்த மொழி. இந்த உண்மையை உணராத காரணத்தால் வட மொழியறிஞர்கள் தோல்வியுற்றனர்.

வட மொழியறிஞர்கள் வெற்றி பெற முடியாத துறையில், இந்தி மொழியாளர் வெற்றிகாண முனைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இல்லாத துணிச்சலும் இவர்களுக்கு இருக்கிறது. எடுத்துக் காட்டாக ஒன்று காண்போம். ஜாலம், அலங்காரம் முதலான சொற்களைத் தமிழில் புகுத்திய வட மொழியார், அவற்றைப் பன்மை யாக்கிய போது, தமிழ் மொழிக்கு உரிய பன்மை விகுதியாகிய ‘கள்’ விகுதி சேர்த்து, ஜாலங்கள், அலங்காரங்கள் என்றே எழுதினார்கள். ஆனால் இந்தி மொழியாளர் ‘நயா பைசா’ என்ற சொல்லைப் புகுத்திய போது, அதன் பன்மை ‘நயா பைசாக்கள்’ என்றே அமைய வேண்டியதைப் புறக்கணித்து, தமிழுக்கு உரிய பன்மை விகுதிக்கு இடம் தராமல், ‘நயேபைசே’ என்றே எழுத வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். ஆங்கிலேயரும் செய்யத் துணியாத ஒன்று இது. ரூபீஸ், அனேஸ், பைஸ் என்று எழுதுமாறு ஆங்கில அரசாங்கம் வற்புறுத்தவில்லை. ரூபாய்கள், அணாக்கள், பைசாக்கள் என்று எழுதுமாறு விட்டுவிட்டது. இந்தி அரசாங்கமோ ‘நயே பைசே’ என்பதையே பன்மை வடிவமாக வற்புறுத்துகிறது.

இது அரசாங்கப் பொறுப்பில் உள்ளவர்களின் அறியாமையைக் காட்டுகிறது; நினைத்ததை வற்புறுத்தும் ‘யதேச்சதிகார மனப்பான்மை’ யையும் காட்டுகிறது.

நாணயத்துறை இந்தியா முழுவதற்கும் பொதுவாக இருக்க வேண்டிய ஒன்று. அதனால் சிலருக்கு அத்தகைய மனப்பான்மை ஏற்படலாம். ஆனால், கலைத்துறை நாட்டுக்கு நாடுவேறாகவும் மொழிக்கு மொழி வேறாகவும் அமைவது இயற்கை. அத்தகைய கலைத்துறையிலும், இதே மனப்பான்மை காணப்படுமானால், என்னென்பது? எடுத்துக் காட்டாக வானொலியைக் கேட்போம். ‘ஸ்வாகதம்’ ‘சுகம் சங்கீத்’ ‘கீதமஞ்சரி’ ‘கீதமாலிகா’ என்ற

(40-ம் பக்கம் பார்க்க)

இலவச ஆரம்பக் கல்வித் திட்ட அமுல்

எல்லா மாணவர்களுக்கும் இடவசதி, ஆசிரியர்களுக்கு வேலை வசதி நடவடிக்கைகள்

ஐந்தாம் வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்க இந்த ஆண்டில் அமுலாக்கப்பட்ட திட்டத்தின் விளைவுகளை ஆராய மாநிலம் பூராவுக்குமே சர்வே எடுக்கப்பட்டது. அதிலிருந்து கீழ்க்கண்ட தகவல்கள் தெரியவந்துள்ளன. மாநிலத்தில் 1958-59-ல் மொத்தம் 1011 சம்பளம் வசூலிக்கும் பள்ளிகள் இருந்தன. அவற்றுள் 45 பள்ளிகள் மட்டுமே சர்க்கார் கிராண்டை மறுத்துவிட்டு தொடர்ந்து சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளாக நீடிக்கின்றன. 7 சம்பளம் வாங்கும் பள்ளிகள் மூடப்பட்டன. மூடப்பட்ட 7 பள்ளிகளில் 2 சென்னை நகரையும், 2 பள்ளிகள் திருச்சியையும், 3 பள்ளிகள் மதுரை நகரையும் சேர்ந்தவையாகும். பள்ளிகள் மூடப்பட்டதால் இடமிழந்த எல்லா மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளவும், ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கவும் திருச்சியிலும் மதுரையிலும் கூடுதல் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

சென்னை நகர் நிலவரம் வருமாறு:-இந்தப் புதுத் திட்டத்தின் விளைவாக குழந்தைகளுக்கு கல்வி வசதியோ, ஆசிரியர்களுக்கு வேலையோ பாதிக்கப்படாதவாறு பார்த்துக்கொள்வோம் என்ற அரசாங்கத்தின் உறுதிமொழி மாணவர்களைப் பொறுத்தவரை அநேகமாகநிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆசிரியர்களைப் பொறுத்தவரை பெருமளவுக்கு நிறைவேற்றப் பட்டு விட்டது.

மதுரை

மதுரை கீழ வாசல் வீதியில் இருந்த சரஸ்வதி உயர்தர ஆரம்பப்பள்ளி மூடப்பட்டுவிட்டதால் அதற்குப் பதிலாக மதுரை பாலரங்கபுரம் தெருவில் நகராட்சி ஆரம்ப உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கானபாளையம் சரஸ்வதி ஜூனியர் பேசிக் பள்ளி, மதுரை சீதாராம ஆஞ்சனேய ஆரம்பப்பள்ளி ஆகிய இரண்டும் மூடப்பட்டதனால் இடமிழந்த மாணவர்கள் அண்டையிலிருந்த நகராட்சி ஆரம்பப்பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேற்கண்ட மூன்று பள்ளிகளிலிருந்து வேலை இழந்த 23 ஆசிரியர்கள், ஒரு தொழில் பயிற்சி ஆசிரியர் ஆகியவர்களில் 23 ஆசிரியர்களும் நகராட்சி சர்வீஸில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தொழில் கல்வி ஆசிரியர் நியமனப் பிரச்னை நியமனக் கமிட்டியின் அங்கீகாரத்துக்காகச் சென்றுள்ளது.

செங்கல்பட்டு

செங்கல்பட்டில் மூன்று பள்ளிகள், கிராண்ட் பெறாத சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளாகவே நீடிக்க முடிவு செய்தன. அவற்றில் ஆள் குறைப்பினால் 12 ஆசிரியர்கள் வேலை இழந்தனர். அவர்களில் 5 ஆசிரியர்கள் எய்டட் பள்ளிகளிலும் ஊராட்சி மன்ற பள்ளிகளிலும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். 4 ஆசிரியர்களுடைய மனுக்கள், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மூன்று ஆசிரியர்களின் மனுக்கள் இன்னும் கிடைக்கவில்லை. அங்குப் படிக்க வசதியில்லாத குழந்தைகளுக்கு மற்ற பள்ளிகளில் படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும் செயின்ட் ஜோஸப் பள்ளி நிர்வாகத்தின் கீழ் ஒரு ஆரம்பப்பள்ளி தொடங்கும் விஷயம் மாவட்டக் கல்வி அதிகாரியின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

சென்னை நகரம்

1958–59–ல் சென்னை நகரில் 230 அரசாங்க உதவிபெறும் பள்ளிகள் இருந்தன. (வட சென்னையில் 129. தென் சென்னையில். 101) அவற்றுள் 184 பள்ளிகள் சம்பளம் வசூலிக்கும் பள்ளிகள். 46 பள்ளிகள் சம்பளம் வசூலிக்காத பள்ளிகள். இந்த 184 பள்ளிகளில் 143 பள்ளிகள் இலவசக் கல்விப் பள்ளிகளாக ஆக முனைந்தன. 39 பள்ளிகள் மட்டும் 1959-60 லிருந்து 5-வது வகுப்பு வரை சம்பளம் வாங்கும் பள்ளிகளாகத் தொடர்ந்து நீடிக்க முடிவு செய்தன. 2 பள்ளிகள் மூடப்பட்டன.

மாநிலத்தில் சம்பளம் வசூலிக்கும் 45 ஆரம்பப் பள்ளிகளில் 39 பள்ளிகள் சென்னை நகரில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சம்பளம் வசூலிக்கும் பள்ளிகள்

(38-ம் பக்கத் தொடர்ச்சி)

சொற்களை அன்றாடம் கேட்கிறோம். இந்தச் சொற்களைத் தமிழ்ச்செவி கேட்டதும், வெறுப்பே தோன்றுகிறது. தமிழன் விரும்பும் தமிழ்ச் சொற்களும் தமிழ் ஒலியும் இல்லாத அளவிற்கு வானொலியின் போக்கை மாற்றி இந்தியாவின் ஒருமைப்பாட்டை வளர்க்க எண்ணினால், அது வீண் கனவாகும். தமிழரின் உள்ளத்தில் வெறுப்பை வளர்த்து விட்டு, அன்புக்கரம் நீட்டி அழைப்பது, வீண் நடிப்பாகவே மக்களால் கருதப்படும். உண்மையாகத் தமிழர்களுக்குக் கலைவிருந்து அளிக்கவேண்டுமானால், தமிழர் விரும்பும் சொற்களையே தமிழ் நாட்டு வானொலியில் பரப்பவேண்டும். இந்த உண்மை அறியாமல் தமிழர்க்கு இழைக்கும் தவறுகள், வடமொழியார், கண்மூடித் தன்மையோடு இழைத்த தவறுகள்போல் தோல்விக்கே அழைத்துச் சென்றுவிடும். இன்று தவறுகளுக்கு இடம் தந்துவிட்டு, நாளை வருந்துவதில் பயன் இல்லை.

வகையில் செங்கல்பட்டில் 3 பள்ளிகளும், திண்டுக்கல்லில் ஒரு பள்ளியும் வேலூரில் 2 பள்ளிகளும் இருக்கின்றன. சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளில் சில மாணவர்கள் உயர்ந்த விகித சம்பளம் கொடுக்க இயலாததால் பள்ளி நிர்வாகத்தினர் சில பிரிவுகளை மூடிவிட்டனர். சில ஆசிரியர்களை ஆட்குறைப்பு செய்து நீக்கிவிட்டனர். ஆள் குறைப்பு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மொத்தத் தொகை 173 ஆகும். 2 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக 200 வகுப்புகள் தொடங்க வகை உள்ளது. சென்னை வடக்கு, சென்னை தெற்கு, மாவட்ட கல்வி அதிகாரிகள் வசத்தில் புது வகுப்புகள் தொடங்கும் விஷயம் விடப்பட்டது. ஆள் குறைப்பு செய்யப்பட்ட ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கென்று மாவட்டக்கல்வி அதிகாரிகள் 125 ஆசிரியர் வேலை ஸ்தானங்களைச் சென்னை நகராட்சிக்கு ஒதுக்கியுள்ளனர். ஆள் குறைப்பு செய்யப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து இலாகா அதிகாரிகளுக்கு வரும் மனுக்கள், நியமனத்துக்காக, சென்னை நகராட்சிக்கு அனுப்பப்படுகின்றன. இதுவரை 75 ஆசிரியர்கள், நகராட்சி சர்விஸில் வேலைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். 37 ஆசிரியர்கள், உதவி பெறும் பள்ளிகளில் வேலைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் விஷயம் நகராட்சியால் கவனிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆசிரியர்கள், காலக்கிரமத்தில் சென்னை நகராட்சியிலோ அல்லது தனிப்பட்ட நிர்வாகத்தினரிடமோ வேலைக்கு அமர்த்தப்பட்டு விடுவர் என்று நம்பப்படுகிறது.

மாணவர் நிலைமை

இலவச ஆரம்பக் கல்வித் திட்டத்தின் விளைவாக சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளிலிருந்து வட சென்னைப் பகுதிகளில் சுமார் 3000 மாணவர்களும், தென் சென்னைப் பகுதிகளிலிருந்து சுமார் 2000 மாணவர்களும், பள்ளி மாறும்படி நேர்ந்தது. சென்னை வடக்கு, சென்னை தெற்கு மாவட்டக்கல்வி அதிகாரிகளும், நகராட்சிக் கல்வி அதிகாரியும் 1959 ஜூன் 3வது வாரத்தில் சென்னை நகரப் பள்ளிகளைப் பார்வையிட்டனர். இந்த இடம் மாற நேர்ந்த மாணவர்களை, அடுத்துள்ள பள்ளிகளில் சேர்ப்பதில் குறிப்பிட்ட கஷ்டம் இல்லை என்று தெரியவந்தது. சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளிலிருந்து மாணவர்கள் வந்து சேர்ந்த காரணத்தினால், இலவசப்பள்ளிகளின் நிர்வாகிகள் தங்கள் பள்ளிகளில் வகுப்புப் பிரிவுகளை அதிகரித்துள்ளனர். கூடுதல் வகுப்புப் பிரிவுகளை ஆரம்பித்தும் அல்லது புதிய பள்ளிகள் தொடங்கியும் எல்லா மாணவர்களுக்கும் இட வசதி செய்யும்படி, கமிஷனருக்குத் தகவல் அனுப்பப்பட்டது. 1 லிருந்து 5 வது வகுப்பு வரை வகுப்புகளில் மொத்த மாணவர்கள் தொகை 30-4-59-ல் 159,583 ஆகவும் 30-6-59-ல் 1,64,076 ஆகவும் இருந்தது.

புதிய தொடர் நாடகம் :

வெண்ணிலா

[தாமரைக் கண்ணன்]

நிலவினிலே......................!

பணமலை	...	ஜமீன்தார்
மலையழகர்	...	ஆசிரியர்
சோடா	...	வேலைக்காரன்
வெண்ணிலா	...	ஜமீன்தார் மகள் (வயது 12)
வான் மதி	...	வெண்ணிலாவின் தோழி (வயது 11)
வடிவேலன்	...	ஜமீன்தார் மகன் (வயது 13)
மது / **பொய்யப்பன்**	...	வடிவேலன் நண்பர்கள் (வயது 14)
111 / **144**	...	போலீஸ்காரர்கள்
சப் - இன்ஸ்பெக்டர்		
முத்து	...	காரோட்டி.

முதலியோர்.

கதிர் 1

சாலையில் ஒரு மரத்தடி ;
காலையில் மணி எட்டு.

(மதுவும் பொய்யப்பனும் தங்கள் புத்தகப் பைகளைத் தோளில் மாட்டிய வண்ணம் வருகின்றனர்.)

பொய்யப்பன் :— மது! என்னடா இன்னும் வடிவேலனைக் காணோம்?

மது :— *அவன் சுத்த மோசம்டா! பள்ளிக் கூடம்தான் நேரங்*

கழிச்சுப் போறேம் விளையாடறதுக்காவது சீக்கிரம் வர வேணும்...?

பொய்யப்பன் :—அவனுக்கென்ன, மது! ஜமீன்தார் வீட்டுப்பிள்ளை. படிக்கலேன்னாலும் கவலையில்லே. ஏராளமான பணம் இருக்கு. தாராளமாக செலவு செய்து கிட்டு ஜாம் ஜாம்னு ராஜாமாதிரி இருக்கலாம். நாம் இரண்டு பேரும் படிச்சாதானே பிற்காலத்திலே சுகமாக இருக்க முடியும்.

மது :—உஸ்...... முட்டாள்! என் எதிரில் படிப்பைப் பற்றிய பேச்சை எடுக்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது? இதோ பார், பொய்யப்பா! எனக்கு படிப்புன்னு கசப்பா இருக்கு. உனக்கு அக்கறையிருந்தா நீ படிச்சுக்கோ. நான் வேண்டாம் என்று சொல்லவில்லே. ஆனா, என் கூட கூடக் கூடாது.

பொய்யப்பன் :—சரி, சரி...... கோபித்துக் கொள்ளாதே, மது! இனிமேல் அப்படியெல்லாம் சொல்லலே......ம்......அதோ, வடிவேலன்கூட வர்றான்!

(வடிவேலன் வருகிறான்.)

வடிவேலன் :—முட்டாள்!

மது :—என்ன வடிவேலா திட்டுகிறாய்?

வடிவேலன் :—உன்னையில்லே, மது! எங்கள் வீட்டு வேலைக்காரன்... இல்லே... அவனை சொன்னேன்.

பொய்யப்பன் :—ஏன்?

வடிவேலன் :—'சீக்கிரம் பள்ளிக்கூடம் போதம்பி... சீக்கிரம் பள்ளிக்கூடம் போ தம்பி'ன்னு உயிரை எடுக்கிறான்......

பொய்யப்பன் :—அட கடவுளே! உங்க அப்பா அதைப்பற்றி ஒன்றுமே கேட்பதில்லையா?

வடிவேலன் :—அவரு மட்டும் என்ன? 'ஏண்டா பையனே இந்த மாதிரி விரட்டுகிறாய்? நீ வாடா கண்ணுன்'னு செல்லமா என்னை கூப்பிட்டு முத்தமா கொடுக்கிறாரு. வேலைக்காரனாவது, பள்ளிக்கூடம் போகலையா என்று கேட்பதோடு சரி. அவரு என்னடான்னா 'பள்ளிக்கூடம் போகலேன்னா—சோறு கிடையாது போ'ன்னு கண்டிப்பா சொல்லி விடுறாரு.

மது :—அடபாவமே! முதுகிலே அடிச்சாகூட பரவாயில்லையே...! வயிற்றிலேயில்ல அடிக்கிறாரு.

பொய்யப்பன் :—வடிவேலா! மது! வாங்கடா வாத்தியார் அய்யா விடம் போய் சொல்லலாம்!

வடிவேலன் :—உனக்கு மூளை ஏராளம், பொய்யப்பா! பள்ளிக்கூடம் போகாததால்தானே இவ்வளவும்? இவரு வாத்தியாரிடம் சொல்லப் போறாராம்!

மது :—வாத்தியாரிடம் போனதும், 'ஏண்டா நோங்கழிச்சி வந்தே? ஏறு பெஞ்சி மேலே'ன்னு சொல்லப் போறாரு. அதை விட்டுட்டு ஆசையா ஏதாவது கேட்பாரா என்ன?

பொய்யப்பன் :—அந்த மாதிரி வாத்தியார் சாதுவா இருந்தா நமக்கு இன்னொரு வால்கூட முளைச்சிடுமே......

வடிவேலன் :—அடச்சே, சும்மா இருடா. ஏண்டா, மது! படிப்பிலே என்னடா இருக்கு! படிச்சவனெல்லாம் பயிரிடவும் தெரியாம தொழில் செய்யவும் தெரியாம பட்டினிகிடந்து தற்கொலை செய்துக்கறானுங்கன்னு பத்திரிகையிலே படிக்கிறோம். அது ஏன் நம்ம வீட்டிலே இருக்கிற பெரியவங்களுக்குத் தெரியலே, சேச்சே! எனக்கென்னவோ படிக்கவும் பிடிக்கலே...... படிக்கிறவங்ககூட சேரவும் பிடிக்கலே!

மது :—வடிவேலா! வீண்பேச்சு ஏன்? நேரந்தான் ஆகிறது. பொய்யப்பா அவனிடம் ஒரு கோலி கொடு. நீயும் வடிவேலனும் இருங்க, நான் ரெட்டாளா இருக்கிறேன். சரி! 'பேந்தா'வுக்குக் கோடு போடுடா.

(பொய்யப்பன் கோலிகளைப் பெற்றுக் கொண்டு கோடு போடுகிறான். புத்தகங்களைப் போட்டுவிட்டு ஆட ஆரம்பிக்கிறார்கள். அதற்குள்......)

வடிவேலன் :—மது — மது! என் தங்கை வெண்ணிலா வர்றாடா? எனக்குப் பயமாயிருக்கு. எங்க அப்பாவிடம் போய் நான் பள்ளிக்கூடம் போகாம கோலி விளையாடினேன்னு சொல்லிடுவாளே!

மது :—சரி — சரி! நீ போய் ஒளிஞ்சுக்கோ!

(வடிவேலன் ஒளிந்துகொள்ள வெண்ணிலாவும் வான்மதியும் வருகின்றனர்.)

வெண்ணிலா :—பொய்யப்பா! எங்க அண்ணன் வடிவேலன் எங்கே?

பொய்யப்பன் :—எங்களுக்குத் தெரியாதே! அவன் இப்போதெல்லாம் எங்களோடு சேருவதில்லை.

வெண்ணிலா :—பரவாயில்லையே...... எங்க அண்ணனுக்கு அவ்வளவு நல்ல குணம், வந்திருச்சா?

மது :—ஓஹோ! — அப்ப நாங்க கெட்டவங்கன்னு சொல்றியா?

வெண்ணிலா :—நீதான் கெட்டவன்......இல்லையே...... உனக்கு ஏன் அவ்வளவு கோபம் வருது? வாடி, வான்மதி...... நாம் போகலாம்!

(போகின்றார்கள். அவர்கள் மறைந்தவுடன் வடிவேலன் பயந்தபடியே வருகிறான்)

வடிவேலன் :—(அச்சத்துடன்) மது!

மது :—தைரியமாயிரு, வடிவேலா! நீ நம்ம குழுவிலே எப்ப சேர்ந்தாயோ......

பொய்யப்பன் :—அப்பவே சனியன் பிடிச்சுடுத்து!

மது :—டாய்......!

பொய்யப்பன் :—நமக்கல்ல. நம்ம விரோதிகளுக்கு!

மது :—கேட்டியா, வடிவேலா? உனக்கு யாராவது தொந்தரவு கொடுத்தாங்க — எங்கிட்ட சொல்லு. நான் பார்த்துக்கறேன். யாராக இருந்தாலும் சரி...! அப்பா...... அம்மா...... வாத்தியாரு யாராயிருந்தாலும் சரி!!

வடிவேலன் :—மது! வாத்தியார் வருகிறார்டா!

மது :—ஆ!

(புத்தகப் பையைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறான்! பொய்யப்பனும், வடிவேலனும் புத்தகங்களை வாரிக்கொண்டு அவன் சென்ற வழியே ஓடுகின்றனர்!)

— திரை —

கதிர் 2

பணமலையின் இல்லம்
மணி பன்னிரண்டு.

(பணமலை ஏப்பம் விட்டுக்கொண்டே வந்து, அமர்ந்து மூக்கு கண்ணாடியைப் போட்டுக்கொண்டு தினசரி ஒன்றைப் படிக்கிறார். வேலைக்காரன் சோடாவைக் கூப்பிடுகிறார்.)

பணமலை :—சோடா! டேய்...... சோடா......!!

சோடா :—(உள்ளிருந்து) இதோ—வந்துட்டேனுங்க, எசமான்!

பணமலை :—வந்துட்டேன்னு அங்கே என்னடா பண்றே?

(மீண்டும் படிக்கிறார். சோடா வந்து நிற்கிறான். அவர் நிமிர்ந்து பார்த்து...)

என்னடா வேண்டும்?

சோடா : கூப்பிட்டீங்களே, எசமான்!

பணமலை :—நானா கூப்பிட்டேன், கழுதை! கனவு கண்டாயா? போ......போ...... போய் வேலையைக் கவனி......!

(போகிறான். பணமலை எழுந்து உலவிக்கொண்டே......)

டேய் இங்கே வா! ஓகோ...... உன்னைக் கூப்பிட்டேனா? ம்...... என்னவோ நினைச்சேன் மறந்துட்டேன் ம்...... சோடா! ஏண்டா! என் அனுபவத்திலே சொல்றேன். பிச்சைக்காரப் பசங்க நாள் முழுதும் வண்டி வலிக்கிறானுக. இடுப்பு ஒடிய ரிக்ஷா இழுக்கிறானுக. அவனு(ங்)க உடம்பு என்ன இரும்பா? நமக்கு என்னடான்னா மாடிக்கு ஏறி இறங்கினா கால் வலிக்குது; கொஞ்சதூரம் காரிலே போய் வந்தா உடம்பு நோவுது. (ஏவ்) டேய், நிக்கறேயே, உலக்கை மாதிரி! காலைப் பிடிடா......

சோடா :—உட்காருங்க, எசமான்!

பணமலை :—என்னை உட்காரச் சொல்ல நீ யாருடா? கழுத......

சோடா :—காலைப் பிடிக்கச் சொன்னீங்களே எசமான்!

பணமலை :—ஓஹோ ! (ஏப்பம் விட்டுக்கொண்டே அமர்ந்து) டேய்! வயிறு என்னவோ ஒரு மாதிரியா இருக்குது. குளிக்கிற இடத்திலே, மாடத்திலே பாதி சுருட்டு வைச்சிருக்கேன். எடுத்து வா.

சோடா :—இராத்திரி மழை பெஞ்சுதே. நனைஞ்சி போச்சிங்க.

பணமலை :—நனைஞ்சா என்னடா ? காய வைத்து மறுபடியும் சுருட்டிக்கிறது.

சோடா :—இல்லை எசமான்! நான் அதை எடுத்துப் போட்டுட்டேனுங்க.

பணமலை :—நாசமா போனவனே ! அரையணா சுருட்டுடா....... அரையணா சுருட்டு!

சோடா :—அதுதான் பாதி புடிச்சுட்டிங்களே......

பணமலை :—(துள்ளி) பிடிச்சா என்னடா? மீதி காலணா இல்லே...? காலணாடா காலணா! முள்ளங்கி பத்தை மாதிரி இரண்டு நயா பைசா! ஒரு அணாவிலே மூணில் ஒரு பாகம். ஒரு ரூபாயில் ஐம்பதில் ஒரு பாகம் அயோக்கியனே! உன் புத்தி எங்கேடா போச்சு?

சோடா :—அதோங்க......

(அவன் காட்டும் திசையிலிருந்து வெண்ணிலா வருகிறாள்.)

வெண்ணிலா :—அப்பா !

பணமலை :—வாம்மா, வெண்ணிலா? அண்ணன் எங்கே......?

வெண்ணிலா :—இங்கே இல்லையா ? பள்ளிக்கூடமே வரவில்லையப்பா !

பணமலை :—ம் (பெருமூச்சுடன்) வருஷா வருஷம் போல நானே அவனை மேல் வகுப்புக்கு மாத்திடுவேன்னு நினைச்சிகிட்டு இப்படி சுத்தறான் போலிருக்கு !

வெண்ணிலா :—அப்பா! எங்கள் ஆசிரியர் உங்களை பார்க்கணும்னு சொன்னார், அப்பா !

பணமலை :—உங்க ஆசிரியரா ? யாரு ?

வெண்ணிலா :—அவர் தாம்பா ! மலையழகர் ! உங்களுக்குத் தெரியாது......?

பணமலை :—ம்......ச்சூ சூ ஓஹோ...... அவரா? ஏம்மா பார்க்கணும்னாரு.

வெண்ணிலா :—நம்ம அண்ணனைப் பற்றி சொல்றதுக்குதான். அது காவாலிப் பையன்களோடு சேர்ந்து கெட்டுப் போகிறதாம். அதோ அவரே வந்து விட்டார்! (கை கூப்பி) வணக்கம், அய்யா!

மலையழகர் :—(வந்து கொண்டே) வணக்கம்! ம்... வணக்கமுங்க!

பணமலை :—ஆங்...... வாங்க...... வாங்க உட்காருங்க !

(அமர்கின்றார். வெண்ணிலா போகிறாள்.)

நீங்க வர்றதா இப்பதான் வெண்ணிலா சொன்னாள்.

மலையழகர் :—ஒரு வாரமாகவே உங்களைப் பார்க்கணும்னு நினைச்சிருந்தேன். நம்ப வடிவேலன் பள்ளிக்கூடம் ஒழுங்கா வருவதில்லை. சில கெட்ட பையன்களோடு சேர்ந்து கெட்டுப் போகிறான்.

பணமலை :—அப்படிங்களா ?

மலையழகர் :—ஆமாம். நானும் எவ்வளவோ நல்ல தனமாக சொல்லிப்பார்த்தேன் - கேட்கவில்லை......

பணமலை :—இருக்கட்டும்... இருக்கட்டும்! நான் கண்டிக்கிறேன் நீங்க அடிச்சுட, கிடிச்சுட போறீங்க...

மலையழகர் :—அதெல்லாம் இல்லை...

பணமலை :—எனக்கு நிறைய வேலை இருக்குது. ம்... வேறு ஒன்றும் விசேஷம் இல்லைங்களே...?

மலையழகர் :—இதைக் கொஞ்சம் பாருங்க !

(ஒரு நோட்டுப் புத்தகத்தை நீட்டுகிறார்.)

பணமலை —(அதை வாங்காமலேயே) என்ன விஷயம்? நீங்களே சொல்லுங்களேன்.

மலையழகர் :—நம்ம பள்ளிக்கூட கட்டிடம் பிள்ளைகள் உட்காருவதற்கு வசதியாக இல்லை. அதைப் பழுது பார்க்கணும். புதிய முறையில் சில போதனை உபகரணங்கள் வாங்கணும்; பிள்ளைகளுக்கு பகல் உணவு கொடுக்கணும், அதுக்காக பணம் தேவைப் படுதுங்க. கிராமத்திலேயும் சில பேர் உதவி செய்யறதா கையெழுத்துப் போட்டிருக்காங்க நீங்களும்......

பணமலை :—அதற்கென்ன ? பள்ளிக்கூடத்திற்குத்தானே? தாராளமாக தர்றேன்.

மலையழகர் :—இந்த புத்தகத்தில் எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்பதைக் குறித்து கையெழுத்து போட்டுவிட்டால் நல்லது.

பணமலை :—வேணும்...வேணும்! இதோ பாருங்க—நான் என் அனுபவத்திலே சொல்றேன். நான் இதுவரை சொன்ன சொல்லை மாற்றிப் பேசினதில்லை. அப்படியிருக்கும்போது கையெழுத்து எதற்கு? காலெழுத்து எதற்கு? உங்களுக்கு எவ்வளவு பணம் வேணும் — அதைச் சொல்லுங்க!

மலையழகர் :—உங்கள் பிரியம். எவ்வளவு கொடுக்கிறீர்களோ கொடுங்கள்.

பணமலை :—ஆங்...... நான் யோசித்து சொல்றேன். இன்னொரு நாளைக்கு வாங்க.

மலையழகர் :—ம்...... நான் வரட்டுங்களா? (எழுந்து) வணக்கம்!

பணமலை :—நல்லது, போய் வாங்க!

(மலையழகர் செல்கிறார்.)

சோடா :—ஆசிரியர் ரொம்பவும் நல்லவருங்க!

பணமலை :—ரொம்ப நல்லவர்தான். யார் இல்லேன்னு சொன்னது! ஆனா நன்கொடைன்னு பணம் கேட்கிறாரே — அதுதானே எனக்குப் பிடிக்கல.

சோடா :—நீங்க எவ்வளவு எசமான் கொடுக்கப் போறீங்க!

பணமலை :—எவ்வளவுடா கொடுக்கலாம், நீதான் சொல்லேன்!

சோடா :—நம்ம தகுதிக்கு நூறு ரூபா கொடுக்கலாமுங்க!

பணமலை :—(அலறி) ஆ...... நூறு ரூபாயா? யார் அப்பன்வீட்டுப் பணம்னுடா நினைச்சே! அய்யே — நூறு ரூபா! ஆயிரத்து அறு நூறு அணா, ஆறாயிரத்து நானூறு காலணா.

சோடா :—பத்தாயிரம் நயா பைசாங்க!

பணமலை :—பின்னே சுலபமா சொல்லிட்டியேடா நூறு ரூபான்னு! தடிக்கழுதை! (ஏய்) சரி—சரி போ......போ......போய் வேலையைக் கவனி!......

(சோடா போகிறான். ஏப்பம் விட்டுக் கொண்டே......)

பணமலை :—என் அனுபவத்திலே சொல்றேன். பணக்காரன் வெளியில் தலைகாட்ட முடியல. பொழுது விடிஞ்சா நன்கொடை — பொழுது போனா நன்கொடை! சேச்சே! உலகத்திலே, சூரியன் புறப்படறதே பெரிய தப்பா போச்சு — மறுபடியும் அஸ்தமனம் ஆகிறவரைக்கும் எவன் நன்கொடைக்கு வந்துடுவானோன்னு மனசு 'திக்—திக்'குன்னு அடிச்சுக்குது. கடவுளே! உலகத்திலே சூரியனே புறப்படாம இருக்கிறதுக்கு ஒரு வழி செய்ய மாட்டியா! அப்பனே! ஆலகாலம் உண்டவனே — அனாதைரட்சகனே!

(கைகூப்பி மேற் கூரையை நோக்குகிறார்)

— திரை —

[தொடரும்]

ஆரம்பப் பள்ளிப் பாட புத்தகங்கள்

அரசாங்கம் வெளியிடும் திட்டம்

சென்னை அரசின் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுவதாவது:—

ஆரம்பப் பள்ளிகளுக்கு அரசாங்கமே பாடப் புத்தகங்களை வெளியிட உத்தேசித்திருப்பதாக 1958 ஆகஸ்டு 21-ல் அரசாங்கம் அறிவித்திருந்தது. 1, 2, 3, 5-ம் வகுப்புக்கான பாடப் புத்தகங்கள், 1961-62—லிருந்து வெளியிடத் திட்டமிட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இது சம்மந்தமாகப் போதிய ஏற்பாடுகள் செய்வது சாத்தியமில்லாமல் போய்விட்டது. எனவே, புதிய 5-ம் வகுப்பு ஆங்கிலப் பாடப் புத்தகத்தை மட்டும் அரசாங்க அச்சகத்தில் வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டது. 1960-61-லிருந்து எல்லாப் பள்ளிகளுக்கும் இ[illegible] பாடப் புத்தகமாக வைக்கப்படும். 1960—61-ல் பயன்படுத்துவதற்கென வேறு எந்தப் பாடப் புத்தகத்தையும் அரசாங்கம் வெளியிடாது.

ஆரம்பப் பள்ளிகளுக்கு இலாகா மூலமாகப் புத்தகங்களை வெளியிடுவதில் பூர்வாங்க வேலைத் திட்டம் வருமாறு :—

1961—62-ல் இரண்டு வகுப்புக்களுக்குத் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் வெளியிடப்படும். எந்த இரு வகுப்புகள் என்பது பின்னர் முடிவு செய்யப்படும்.

1962—63-லிருந்து ஆரம்பப் பள்ளிகளில் 1-லிருந்து 5-வது [illegible] எல்லா வகுப்புகளுக்கும் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் [illegible] யிடப்படும்.

186343

துண்டு நேரம்

[ஜே. ஜே. துரைராஜ், பி. ஏ., எல். டி.]

**[காலம் பொன்னை விட மதிப்புயர்ந்தது.
பொன் போனால் ஈட்டிக்கொள்ளலாம்.
காலம் போனால் மீட்க முடியாது.]**

காருபுரத்தில் இருக்கும் கந்தன் ஓர் கஞ்சன். அவனை எவருமே விரும்புகிறதில்லை. கண்டாலும் கூட காத வழி ஓடிவிடுவார்கள். ஆனால் காசு என்றால், கந்தன் தன் உயிரையும் கொடுத்துவிடுவான். தம்படி தம்படியாகச் சேர்த்துத் தனவந்தனாகிவிட்டான்.

இவ்வுலகத்தில் தெருவில் கிடக்கும் பத்திரிகைத் தாள் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து விற்றுப் பணத்தைச் சேர்த்தவர்களும் உண்டு. வட்டிக்குப் பணத்தை விட்டு, வயல், வாசல்களை வாங்கிக்கொண்டவர்களும் உண்டு. எனினும் இவர்களை மக்கள் அதிகமாக மதிப்பதில்லை. ஏனென்றால் இவர்கள் பணத்தைச் சேகரித்து வைத்துவிட்டார்களே தவிர, தங்கள் நன்மைக்காகவோ, அல்லது மற்றவர்களுடைய நன்மைக்காகவோ செலவிட்டதில்லை. எனவே "கஞ்சன்" என்ற பெயர் தனித்தனியாக இவர்களுக்குப் பொருத்தமாகும்.

ஐம்பது வருஷங்களுக்கு முன் ஸ்காட்லந்து தேசத்தில் ஒரு தனவந்தர் இருந்தார். பள்ளிக்கு நன்கொடை பெறும் நோக்கமாக அவரைக் காண ஒரு அம்மாள் போயிருந்தார்கள். அவருடைய வீட்டிலுள்ள அலுவல் அறையில் இருவரும் சந்தித்தார்கள். பேசிக்கொண்டிருக்கும் போது, இருட்ட ஆரம்பித்தது. வெளிச்சம் மங்கி, முகம் மறையும் வேளையில், அவர் மேசையின் மேலுள்ள விளக்கை ஏற்றிவிட்டு, தீக்குச்சியை வெகு துரிதமாக அணைத்து, அதைத் தன் மேசை டிராயரைத் திறந்து, உள்ளே போட்டார். மேலும் சில நிமிஷங்கள் அந்த அம்மாளுடன் பேசிக்கொண்டேயிருந்தார். ஆனால் அந்த அம்மாளின் கவனமோ அந்தத் தீக்குச்சியை நோக்கியே சென்றவாறு இருந்தது. இதை அறிந்த அவர் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார். "இத் தீக்குச்சிகளை நான் தூர எறிந்துவிடுவதில்லை. அவைகளைப் பத்திரமாய்ச் சேகரித்து வைத்திருக்கிறேன். வேளைக்கு வேளை இந்த டிராயர் நிறைந்ததும், முழுவதுமாக எடுத்து விறகாக உபயோகிக்கிறோம்" என்றார்.

அந்த அம்மாளுக்கு இது ஆச்சரியமாகத்தான் இருந்தது. சிக்கனம் எவ்வளவு செல்வத்தை அவருக்குத் தேடிக் கொடுத்திருக்கிறது என்பதை ஒருவாறு உணர்ந்தார்கள். ஆனால் அதே சமயத்தில் உள்ளத்தில் ஒரு ஐயம் உருவாயிற்று. இப்படிப்பட்ட ஒரு சிக்கனக்காரர் எப்படிப் பள்ளிக்கு நன்கொடை கொடுக்கப் போகிறார் என்று. எனவே வந்த காரியத்தைச் சொல்லாமலே வெளியேறிவிடலாமா என்றும் கூட அந்த அம்மாள் யோசித்தார்கள். கடைசியில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, தனது தேவையைத் தெரியப்படுத்தினார்கள். சட்டெனத் தனது செக் புத்தகத்தை எடுத்தார். அந்தத் தனவந்தர். "பத்தாயிரம் பவுன்கள்" என்று எழுதிக் கையெழுத்திட்டு, அந்த அம்மாளிடம் கொடுத்தார்.

சிக்கனத்தைக் கையாடினால் எத்துறையிலுமே இலகுவாய்ச் சித்திபெறலாம். தகர டப்பாக்கள் செய்யும் தொழிற்சாலை நிபுணர்கள் ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதாயிற்று. டப்பாவுக்காகத் தகரத்தை வெட்டின போது, துண்டுத் தகடுகள் ஆயிரக்கணக்காகச் சிதறின. அவைகளை டப்பா செய்வதற்காகப் பிரயோஜனப்படுத்த முடியாது. ஒவ்வொரு நாளும் குவியும் துண்டுகள், மலையத்தனையாயிற்று. எனினும் இதை யாவரும் வாங்க வரவில்லை. ஆனால் நிர்வாகியின் மூளையில் ஒரு புது எண்ணம் உதித்தது. துண்டுத்தகடுகளை உபயோகித்துச் சிறு சிறு குழந்தை—விளையாட்டுச் சாமான்கள் தயாரித்தார். இந்த உப தொழில் அவருக்கு அதிக ஊதியத்தைத் தேடிக் கொடுத்தது. துண்டுப் பிரச்சினையும் தீர்ந்தது.

செருப்புகள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையில் ஒவ்வொரு நாளும் சிறு சிறு தோல் துண்டுகள் பிரயோஜனமற்றவை என்று வெளியே தள்ளப்பட்டன. ஆனால் ஒரு வாலிபன் இத் துண்டுகளைச் சங்கிலி வளையங்களாகச் செய்து, அவற்றை ஒன்றுடன் ஒன்று கோர்த்து, பெல்ட்டுகளாகவும், கயிறுகளாகவும், உறித் தொங்கிகளாகவும் செய்தான். தனித் தனியாக எடுத்தால் ஒரு சிறு துண்டுதான். ஆனால் அவற்றை ஒன்று சேர்க்கும் போது, உபயோகமான பொருட்கள் தோன்றின.

சில வருஷங்களுக்கு முன் இரண்டாம் மகா யுத்தத்தில் காயப்பட்டவர்களுடைய சிகிச்சைக்காகப் பணம் சேகரிக்க வேண்டியதாயிற்று. மக்களின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருந்தது. மக்களும் முன்னமே கூடுமான அளவு கொடுத்துவிட்டதாக எண்ணினார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் மேலும் பணம் எப்படி வசூலிப்பது? "ஐயா, எங்களுக்கு நீங்கள் ரூபாய் ரூபாயாகக் கொடுக்க வேண்டாம். ஆனால்

மார்ச் மாதம் முப்பத்து ஒன்றாம் தேதியில் பாங்கியில் தங்கள் பெயரில் உள்ள கணக்கில் இருக்கும் அணா, பைசாவை மாத்திரம் கொடுத்தால், அதுவே போதும்'' என்ற ஒரு விண்ணப்பத்தை அந்த நிதி நிர்வாகிகள் அனுப்பியிருந்தார்கள். இதை மக்கள் வரவேற்றார்கள். "கொஞ்சம் தானே. எவ்வளவு அதிகமாகப் போனாலும் பதினைந்து அணா, பதினொரு பைக்கு மேலாகப் போகாதே!'' என்ற எண்ணம் அவர்களை உற்சாகப்படுத்தினது. எனவே உற்சாகமாக அதைக் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். தேவைக்கும் அதிகமான பணம் அதிவிரைவில் சேர்ந்துவிட்டது!

பொதுவாக மற்ற எல்லாக் காரியங்களில் சிக்கனமாக இருக்கிறவர்களும் கூட, தங்களுடைய நேரத்தில் சிக்கனமாக இருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷமாக, அனேக மணி நேரங்களை வீணாக்கிவிடுகிறோம். இதை நாம் கவனிப்பதில்லை. "நீங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்'' என்று மற்ற எவரும் நம்மைப் பார்த்துச் சொன்னால் நாம் கோபப்படுவோம். சீறி விழுவோம். ஆனால் இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, நம்மை நாமே ஒரு நாளாவது சோதித்துப் பார்த்தால், இந்தக் குற்றச்சாட்டு எவ்வளவு பொருத்தமானது என்பது விளங்கும்.

நேரத்தைச் சிக்கனமாகச் செலவழிக்க ஏதாவது வழிவகைகள் இருக்கின்றனவா? ஆம், இருக்கின்றன. உங்களுக்குப் பிடித்தமான ஒரு புத்தகத்தை எப்பொழுதும் உங்கள் கோட் உள் பாக்கட்டில் வைத்துக்கொள்ளுங்கள். பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். மற்றவர்கள் எல்லாரும் பஸ் வரும் பாதையை நோக்கி, கழுத்தை நீட்டிக்கொண்டு பஸ் நிர்வாகிகளை நிந்தித்தவாறு இருக்கும் போது, நீங்கள் சட்டெனப் பாக்கட்டில் கையைப்போட்டு, புத்தகத்தை எடுத்து வாசியுங்கள். தற்காலிகமாக பஸ்ஸை மறந்து விடுவீர்கள். இன்னும் கொஞ்சம் தாமதித்து வந்தாலும் பரவாயில்லை என்று நினைப்பீர்கள்.

பல சரக்குக் கடையில், "மண்டியிலிருந்து சர்க்கரை வருகிறது, கொஞ்சம் உட்காருங்கள்'' என்று கடைக்காரர் தமது பதினெட்டுப் பற்களையும் காட்டிச் சிரித்த வண்ணமாகக் கூறுவார். புதுச் சர்க்கரை வரப் போகிறதே என்ற மகிழ்ச்சியில் உங்கள் புத்தகத்தை மறந்துபோகாதீர்கள். மின்சார விசிறிக்குக் கீழாக உட்கார்ந்து, புத்தகத்தைத் திறந்து, முன்பு விட்ட இடத்திலிருந்து, தொடர்ச்சியாய் வாசிக்க ஆரம்பித்துவிடுங்கள். (இல்லையேல், கடைக்காரர் வம்பளக்க ஆரம்பித்து விடுவார்!) ஒரு சம்பாஷணையை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் நீங்கிப் போய்விட்டது அல்லவா?

இரயிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிற போதும், ஏன், இரயிலில் பிரயாணம் பண்ணும் போதும், கையில் புத்தகம் இருந்தால் வெகு பிரயோஜனமாக இருக்கும். இதுவெறும் பொழுது போக்காக மாத்திரம் இருக்க வேண்டியதில்லை. தங்கராஜ் ஒரு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர். ஒழிந்த நேரங்களில் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் ஒழிந்த நேரம் கிடைப்பது அவருக்குக் குதிரைக் கொம்பாயிற்று. இந்நிலையில், அவருக்கு அடுத்த ஊரில் போய் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இரயில் ஏறி, ஒவ்வொரு நாளும் பதினாறு மைல் பிரயாணம் செய்ய வேண்டும். சினேகிதர்கள் அவரைப் பார்த்துப் பரிதாபப் பட்டார்கள். "அவ்வளவு தான். இனி அவருக்குப் படிக்க எங்கே அவகாசம் கிடைக்கப் போகிறது! முன்னமே படிக்க முடியாதவர் இனியா படிக்கப் போகிறார்?'' என்று அவருடைய சினேகிதர்கள் அவர் காது எட்டாத் தூரத்தில் நின்று பேசிக் கொண்டார்கள். ஆனால் நடந்தது என்ன? தங்கராஜ் மேலே சொன்ன யுக்தியைக் கைக்கொண்டார். "துண்டு நேரங்கள்'' அகப்படும் போதெல்லாம் கையில் வைத்திருந்த புத்தகத்தைப் படித்தார். பரீட்சை எழுதினார். பாஸ் பண்ணினார். பட்டம் பெற்றுப் பெரும் பதவியும் வகித்தார்.

—**"நல்வழி"**

" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.

94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை–1,

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certiticate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

காப்பியின் கதை

(பத்மா ராஜகோபால்)

காலையில் எழுந்தவுடன் 'காபி' என்பது தமிழ் நாட்டின் முதுமொழியாகி வெகுகாலமாகி விட்டது. 'காப்பியும் தமிழனும்' உலக அகராதிகளில் இணைபிரியாத சொற்றொடராகவே வழங்கப்படுகிறது. உலகில் அமெரிக்கர்களும் தென் இந்தியர்களும் தான் அதிகமாக காப்பி அருந்துகிறார்களாம். விந்தியமலைக்கு வடக்கே கிடைக்கும் 'சா'யைக் குடிக்க மறுத்து தலைநகரில் காப்பியை 'பாஷணா'க்கிய பெருமையும் தமிழனைச் சேர்ந்ததுதான்.

ஆடு தந்த வரப்பிரசாதம்!

இவ்வாறு தமிழ்க் கலாசாரத்தின் சின்னங்களில் ஒன்றாகி விட்ட காப்பி தமிழ் நாட்டை ஏன் இந்தியாவையே சேர்ந்ததில்லை!! அரேபிய நாட்டில்தான் அது முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் நூற்றாண்டில் காலடி என்னும் ஓர் ஆட்டிடையன் மலைச்சாரலில் தன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தானாம். அங்கு இருந்த சில காட்டுச் செடிகளின் தழையையும் பழங்களையும் தின்ற ஆடுகள் இரவெல்லாம் தூங்காமல் துள்ளி விளையாடினவாம். இதைக் கண்ட காலடி மறுநாள் தானும் அப்பழங்களைத் தின்று பார்த்தான். அவனுக்கு ஏற்பட்ட உற்சாகமும் விறுவிறுப்பும்...!! உடனே அவன் ஆட்டு மந்தையை மலைச்சாரலிலேயே விட்டுவிட்டு, அந்த அதிசயப் பழத்தை பற்றித் தன் நண்பர்களுக்குச் சொல்ல ஓடினான். உலகில் காப்பியைப் பற்றிய முதல் விளம்பரம் அன்று வெளியாயிற்று.

இவ்வாறு தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட காப்பிக்கு இன்றுள்ள மதிப்புதான் என்ன! 18-ம் நூற்றாண்டு வரை அரேபியாவும் துருக்கியும் மட்டுமே பயிரிட்டு வந்தன. ஏகபோகமாக இருந்தது. அரசினரைத் தவிர வேறுயாரும் காப்பிக் கொட்டையையோ செடிகளையோ, வெளிநாட்டிற்கு அனுப்பக் கூடாது என்று சட்டம் இருந்தது.

இங்கிலாந்தில் தடை யுத்தரவு

1650ல் ஒரு மகம்மதிய யாத்ரீகர் அரேபியாவிலிருந்து கொஞ்சம் காப்பிவிதைகளைக் கடத்திக் கொண்டு இந்தியா வந்து சேர்ந்தார். மலபாரில் தான் முதல் காப்பி தோட்டம் போடப்பட்டது. இங்கிருந்து உலகம் முழுவதும் பரவியது காப்பி. பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் 'காப்பி ஹவுஸ்கள்' பல ஏற்பட்டன. நமது காப்பி ஹோட்டல்களைப் போல இந்த காப்பி ஹவுஸ்களில் மக்கள் கூடி நாட்டின் நிலையைப் பற்றி வாதித்தார்கள். எனவே அக்கால காப்பி ஹவுஸ்கள் குட்டி அரசியல் சபைகளாகவே விளங்கின. இதைக்கண்டு பயந்த இரண்டாம் சார்லஸ் மன்னர் யாரும் காப்பி குடிக்கக் கூடாது என்று தடையுத்தரவிட்டார்!

ஜெர்மனியில் காப்பி வந்த பிறகு எல்லாரும் பீர் குடிப்பதை நிறுத்திவிட்டார்களாம். இதனால் ஜெர்மனியின் பீர் தொழில் பாதிக்கப்பட்டது. இதைக்கண்ட பெட்ரிக் என்னும் அரசர் காப்பி குடிப்பது தேசத் துரோகம் என்று அறிவித்தாராம்! அது மட்டுமட்டுமல்ல; காப்பியை ரகசியமாகக் குடிக்கும் தேசத் துரோகிகளைக் கண்டு பிடித்து கைது செய்ய வென்று ஒரு 'முகரும் வீரர்கள் படை' ஒன்றை ஏற்படுத்தினார்கள். இந்தப் படை வீரர்கள் சந்தேகமாக இருக்கும் ஆட்களை முகர்ந்து பார்த்து, காப்பி வாசனை அடித்தால் கைது செய்வார்கள்!

ஸ்வீடனில் கோப்பைகள் பறிமுதல்

ஸ்வீடனில் காப்பி விளையவில்லை. ஆனால், காப்பிப்பைத்தியம் பிடித்த அந் நாட்டு மக்கள் 'அந்நிய நாணயச் செலாவணி'யைப் பற்றித் துளியும் கவலை கொள்ளாமல், அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்தாவது காப்பியைக் குடித்தே தீருவோம் என்று கிளர்ச்சி செய்தார்கள். இந்தப் பிரச்னைக்கு என்ன செய்வதென்று தெரியாத மன்னர் காப்பி சாப்பிடும் கோப்பைகளை எல்லாம் பறிமுதல் செய்யும்படி உத்திரவிட்டாராம்.

இத்தாலியர்கள் தான் முதன் முதலில் காப்பியின் ருசியைக் கண்டு மயங்கியவர்கள். அதை ரசித்துக் குடித்தவர்கள். வெகு சீக்கிரத்தில் இத்தாலியின் தேசீயப் பானமாகி விட்டது. மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும், இந்தக் காப்பி மோகம் ஒட்டிக் கொண்டது.

வல்லரசுகள் போட்டி

இப்படி காப்பி எல்லாத் தேசங்களிலும் "தண்ணீராகச்" செலவழிவதைக் கண்ட டச்சுக்காரர்கள், தங்கள் ஆதிக்கத்திலிருந்த ஜாவாவில் காப்பியைப் பயிரிடத் தொடங்கினர். வெகு விரைவில் "ஜாவா காப்பி" பரவி, அரேபிய, துருக்கி காப்பி வர்த்தகம் படுத்துப் போயிற்று. டச்சுக்காரர்கள் காப்பியைப் பயிர் செய்வதைக் கண்ட பிரெஞ்சுக்காரர்கள் மேற்கிந்தியத்தீவுகளில் காப்பித் தோட்டங்கள் போட ஆரம்பித்தனர்.

இவ்வாறு எல்லா நாடுகளும் காப்பியில் சிரத்தை காட்ட ஆரம்பித்தன. அதை வளர்ப்பதற்கும், கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. டச்சுக்காரர், தங்கள் கயானா தோட்டங்களிலிருந்து காப்பிச் செடிகளையோ, விதைகளையோ எடுத்துச் செல்பவர்கள் மரண தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டம் இயற்றினார்கள். இதைக் கேள்விப்பட்டதும், பிரே

சில் தேசத்து மக்கள் இவ்வளவு அபூர்வமான பொருளைத் தங்கள் நாட்டிற்குக் கொண்டுவந்தே தீருவது என்று முடிவு செய்தார்கள். 1727-ம் ஆண்டில் காப்டன் பல்ஹிடா என்பவரை எப்படியாவது சில காப்பிச் செடிகளையோ, விதைகளையோ கொண்டு வரும்படி அந் நாட்டு அரசாங்கம் அனுப்பிவைத்தது. பல்ஹிடாவின் கோஷ்டி "இரு நாடுகளின் நல்லுறவை" வலியுறுத்தப்போவதாக அறிவிக்கப்பட்டது.

ஸ்திரீ சாகஸம்

கயானா சென்றவுடன் திறமைசாலியான பல்ஹிடா அந்த நாட்டு கவர்னரின் மனைவியின் உதவியை நாடினான். அரசியல் பேச்சு வார்த்தைகள், கலாசார பிரசங்கங்கள் எல்லாம் முடிவடைந்து பல்ஹிடா கோஷ்டியினர் ஊர் திரும்பும் நாள் வந்தது. அன்று கவர்னர், அவர்களுக்கு ஓர் உபசார விருந்து அளித்தார்.

முடிவில் கவர்னர், பல்ஹிடாவிற்கு மாலையணிவித்து புகழுரை கூறினார். கவர்னரின் மனைவி பல்ஹிடாவிற்கு ஒரு பெரிய பூச்செண்டு அளித்தாள். பதில் உபசாரம் கூறும்போது காப்டன் பல்ஹிடா பூச்செண்டிற்காக விசேஷ வந்தனம்கூறினார். வீட்டிற்கு விரைந்த காப்டன், மாலையைத் தூக்கி எறிந்துவிட்டு, பூச்செண்டைக் கவனமாகப் பிரித்தார். கவர்னர் கண்ணெதிரில் கொடுக்கப்பட்ட அதற்குள், பல சிறிய சிறிய காப்பிச் செடிகள், ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பத்திரமாகக் கட்டி எடுத்துக் கொண்டு நாடு திரும்பினார். ஐந்தே ஆண்டுகளுக்குப் பின், கயானா கவர்னருக்கும் அவரது மனைவிக்கும் ஒரு பவுண்டு "பிரேஸில் காப்பிக் கொட்டையை"ப் பரிசாக பிரேஸில் அரசாங்கம் அனுப்பி வைத்தது!!

முன்னூறு ஆண்டுகளுக்கு முன் காப்பி விஷம் என்றும், ஆரோக்கியத்தைக் கெடுக்கும் பானம் என்றும் கருதப்பட்டு வந்தது. அக்கால வைத்தியர்கள், மனச்சோர்வு, சருமவியாதி இவற்றுக் கெல்லாம் காப்பியைக் காரணமாகக் கூறி வந்தனர். வேறு சிலரோ, க்ஷயரோகத்திலிருந்து, நீர், வயிற்று வலி, ஜலதோஷம் எல்லாவற்றுக்கும் அதை மருந்தாக அளித்தார்கள்.

இன்றும் அதில் 'காபின்' என்னும் பொருள் இருக்கிறது. ஆகையால் ஆரோக்கியத்திற்குக் கெடுதல் என்று சிலர் சொல்கிறார்கள். வேறு சிலர், இதை ஒத்துக்கொள்வது மட்டுமல்ல, 'காப்பியா? மெதுவாகக் கொல்லும் விஷம்!' என்பார்கள். எல்லாம் ஒரு கப் 'ஸ்டிராங்' காப்பியைச் சாப்பிட்ட பின்னர்தான்!!

—'தினமணி சுடர்'

கலித்தொகை உணர்த்தும் அரசியற் பாடம்

(இரா. குமரவேல்)

வற்றாத வளமிக்க ஆறுகளும், சோலைகளும், குன்றாத வீரமிக்க திண்தோள் வீரர்களும், பண்பட்ட உள்ளங்கொண்ட அறிவுமிகு சான்றோர்களும், உலகத்து இன்பமெல்லாம் தாங்கள் கலந்து மகிழும் காதலில் காணுகின்ற நெஞ்சமும்—நாம் சங்ககாலச் செய்யுட்களில் காணும் செய்திகளாகும். அச்செய்யுட்கள் கருத்தற்ற கற்பனையைக் கொண்டன அல்ல. உலகியல் போக்கின்படி, நாட்டின் பண்பிற்கேற்ப அவைகள் எழுதப்பட்டுள்ளன. அம்முறையிலே, இன்பத்தின் சிறப்பினை, காதலின் மாட்சியை விளக்குகின்ற சொல்லோவியங்கள் நிறைந்ததே கலித்தொகையாகும். "பொதியத்துத் தென்றலும், நல்யாழின் இன்னிசையும் நல்லெழிற் பருவ மங்கையின் காதலும், கொஞ்சிவரும் குழந்தையின் மழலையும் கூட்டிக் குழைத்த பேரின்பச் சுரங்கம் இக் கலித்தொகைச் செல்வம்".

பொருள் காரணமாகத் தலைவியைவிட்டு நீங்கும் காதலனின் பிரிவையும் அதன் காரணமாய் வாடும் காதலியின் துயரினையும் கற்பனையுடன் உரைக்கின்ற இப் பாலைக் கலியில் நாம் அரசியலைப் பற்றி அதிகம் எதிர் பார்க்கமுடியாது. முற்றிலும் அகத்துறையையே கொண்டுள்ள இக் கவிதைகளில் ஒருசில இடங்களில் அரசியற் கருத்துக்கள் மின்னலென மின்னத்தான் செய்கின்றன. கலித்தொகைச் செய்யுட்களைக்கொண்டு சங்ககால அரசியல் நிலைமையினை நாம் அறிந்துகொள்ளுதல் இயலாத ஒன்றாகும். இருப்பினும் கிடைத்துள்ள ஓரிரு கருத்துக்களைக் கொண்டு சங்ககால அரசியலையும் அதனோடு தற்கால அரசியலையும் சிறிது கவனிப்போம். இலக்கியம் ஓர் இருட்டறையன்று; அதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஒளிவிளக்கிற்கு ஒப்பானவை யாகும். அம்முறையில் பாலைக்கலியைக் காண்போம்.

ஒரு செந்தமிழ்த் தலைவன் பொருள் தேட எண்ணினான். அதை உணர்ந்தாள் தலைவியின் தோழி. அவன் செலவைத் தவிர்க்கத் தோழி பலவற்றைக் காரணமாகக் காட்டுகிறாள். எல்லாம் விழலுக்கிறைத்த நீராயின. இறுதியாக, தலைவியின் பிரிவாற்றாத் தன்மையைக் கடுமையாகக் கூறி, அவன் பிரிந்து செல்கின்ற அக்கணமே அவளுடைய "அரும்பெறல் உயிரும்" இறக்கும் என்கிறாள். பிரிவுக்குப் பின் தலைவியின் உயிர் நிலைபெறாது என உரைக்கவந்த தோழி,

**"ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு, பைதல்கொண் டமைவாளோ?"**

என்று வினவுகிறாள்.

நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அரசினர் நாட்டை எவ்விதத் துன்பமும் சூழாதபடி காத்தல் வேண்டும்; அதுவே, அவர்தம் தலையாய கடமை. அவ்வாறன்றி, அவர்களே நாட்டைக் கலக்கமுறச் செய்தனர் எனின் நாடு பாழ்படுதலன்றி வேறு கதி கிடையாது. வேலி பயிரைக் காக்க வேண்டும். அஃதன்றி அதுவே பயிரை மேய்ந்தால் பயிரின் கதி என்னாகும்? ஆகவே வேலியின்றி எப்படிப் பயிர் செழிக்க முடியாதோ, காதலன் பிரிவைத் தாங்காமல் காதலியின் உயிர் எவ்வாறு நிலை பெறாதோ அவ்வாறே நாட்டை அலைக்கழிக்கும் தலைவர்கள் உள்ளவரை நாடு மேன்மையுறாது.

அடுத்து, கலித்தொகை எட்டாம் பாடலில் கவிஞர்

**"நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல்"**

கதிரவன் கதிர்கள் அனலை வீசி உலகை வாட்டுகின்றன என்றார். நாட்டை ஆளுபவன் நடுவு நிலைமையினின்று வழுவிச் செல்லல் கூடாது. நாட்டினைக் காக்கும் பெரும் கடமையை மேற்கொண்ட மன்னவன் பண்பற்ற ஒருவனின் சொல்லுக்குச் செவி சாய்த்து, தீமைகளை விளைவித்தால் மக்கள் பெருந் துயருறுவர். அவன் கோல் செங்கோலாகாது : கொடுங்கோலென்றே மக்கள் அறைவர். வண்டுகள் மொய்க்கும்படி மதம் பொழியும் யானைகள்கூட "வறன்உழு நாஞ்சில் போல" நிலத்திலே சோர்ந்து வீழும் அளவு வாட்டுகின்ற "போக்கரு வெஞ்சுரத்"தின் கடுமையினை, உங்கள் நெஞ்சத் துலாக்கோலில் ஒரு தட்டிலிட்டு மற்றொரு தட்டில் முன்பு கூறிய அக்கொடுங்கோன்மையைக் கிடத்தினால் அவை ஒக்க நிற்றலைக் காணலாம்.

துறவு நெறியைப் போன்று குற்றம் சிறிதுமின்றி, தன்னுடைய சொந்த முயற்சியினாலே புகழ்பெற வேண்டியதன்றோ அரசியற் பொறுப்பு என்றும் எண்ணாது, தம்முடைய நன்மையைக் கருதுபவராயிற்றே என்றும் எண்ணாது, முறைமை சிறிதுமின்றி, தண்டிக்கும்போது இரக்கங்காட்டாது உயிர் வாங்குகின்ற மன்னனைப் போன்று நிலையற்ற தன்மையுடையது, காதலியைப் பிரிந்து "இன்னுறல் வியன்மார்பன்" தேடிச் செல்லுகின்ற பொருள். இக் கருத்தும் பாலைக்கலியில் காணப்படுகிறது. முறைதிரிந்து நல்லவரை ஒறுக்கும் வேந்தன் அல்லது நாட்டுத் தலைவன் நிலையற்ற பொருளுக்கு ஒப்பாவான்!

தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்ல நினைத்த தலைவனைத் தன்னுடைய பேச்சாற்றலால் போகாது தடுத்துவிட்டாள் தோழி. அந்த வெற்றிச் சேதியை அவன் காதலியிடம் உரைக்கின்றாள். அவ்வமயம் அவன் சொல்ல நினைத்த கொடிய காட்டைப்பற்றிக் குறிப்பிட்டாள். நாட்டு மக்கள் துயரத்தால் அல்லலுற்றுக் கதற, முறைமை சிறிதுமின்றி, அவர்கள் தேடிவைத்த பொருள்களைக் கவர்ந்திடும் கொலைக்கு மஞ்சாத கொடுங்கோல் மன்னனின் ஆட்சியில் மக்களின் வாழ்வு நல்வாழ்வாயிருக்க முடியுமா? இருக்கமுடியாதல்லவா? அத்தகைய கொடிய ஆட்சியிலே வாழ்வும் வளமும் கெட்டழிந்த நாடு கிடப்பதுபோல மரங்கள் முழுவதும் பட்டுப் பாழாகிக் கிடப்பதன்றோ தலைவன் செல்லும் பெருவழி! பட்டமரம் மிக்குள்ள பாலைநிலமும் கெட்டவழிச் செல்லுகின்ற மன்னர்தம் நாடும் ஒன்றென ஒப்பிடுகிறார் கவிஞர்!

(பாலை. 10)

மற்றோரிடத்தில், பாலைச் சுரத்தின் கொடுமையைக் கூறுங்கால் "செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல" என்று கூறுகின்றார். வெகுண்டெழுந்து போர் புரிந்த வேந்தனொருவன் நெருப்பிட்டழிந்த மாற்றவர் நிலம்போலப் பார்ப்பதற்குச் சிறிதும் ஒவ்வாமல் இருந்தது பாலைவழி என்கிறார் புலவர். நகருக்கு நெருப்பிடப்பட்டது பண்டைய நாளில்! நகரின்மீது குண்டுகள் வீசப்படுகின்றன, இற்றை நாளில்! சிவந்திறுத்தபுலத்தைக்கண்டனர். அன்று! ஹிரோஷிமா, நாகசாகிகளைக் காண்கிறோம் இன்று! லெபனானையும் காண்போமோ என்ற ஐயமும் இருந்து வருகிறது!

பொருள் தேடிச் சென்ற காதலன் குறிப்பிட்ட நாள் வந்தது. ஆனால் அவனைக் காணோம்! எனவே இளவேனில், காதலிக்குப் பெருஞ் சுமையாக இருந்தது. "பேதையான அமைச்சனின் திறனற்ற செயலினால் பெருமையழிந்த அரசன் நாட்டிலே வேற்றுப் படைகள் வந்து அழித்துக் கெடுப்பதுபோல, இளவேனில் வந்து என்னைத் துன்புறுத்துகிறது!" என மனம் அழிந்தாள் மாண்புடைத் தலைவி. பாலைக்கலி 27-ம் செய்யுளின் தலைவியவள்! நாடு நல்வழியில் நிற்க சிறந்த அரசன் தேவை! அரசன் செங்கோலோச்ச அறிவு சான்ற அமைச்சர்கள் அவசியம்! பேதைகள் எதற்கும் பயன்படார்! திறனற்றோர் தேவையில்லை! நல்ல அமைச்சர்கள் நாட்டில் இல்லெனில் அந்நாடு வேற்றுப்படைகள் வந்து அழித்துக் கெடுப்பதற்கு ஏதுவாகும். இக்கருத்து எக்காலத்திற்கும் தேவையானதாகும்.

இதுகாறும் கூறியவற்றால் பாலைக்கலியின் மூலம் சில அரசியற் கருத்துக்களைப் பெற்றோம்.

(62-ம் பக்கம் தொடர்ச்சி)

பொது உள்ளம் கொண்ட புனிதர்!

—***—*

“ஆளைப்பாருங்கள் ஆளை! அசல் மனிதக் குரங்கு! பார்க்கவே அருவருப்பாயிருக்கிறது! முதலில் இங்கிருந்து போகச் சொல்லுங்கள். இப்படிப்பட்டவனோடு என்னால் சேர்ந்து வேலை செய்யமுடியாது. கொஞ்சமாவது நாகரிகமாக இருக்கவேண்டாம்? செச்சே! அவனை இப்போதே போகச் சொல்லுங்கள். இல்லாவிடில், இந்த வழக்கை, என்னிடமிருந்து, வேறுயாரிடமாவது கொண்டுபோங்கள்.”

கொஞ்சமும் அஞ்சாமல் தைரியமாகச் சொன்னார் அவர்! இப்படிச் சொன்னால் 'அவன்' மனம் துன்புறுமே என்பதைக்கூட எண்ணவில்லை! 'அவன்' ஒரு குற்றமும் செய்யவில்லை; தோற்றம் சரியில்லை என்பதைத் தவிர.

(61-ம் பக்கத் தொடர்ச்சி)

“நாட்டிற்குத் தேவைப்படுவது நல்லரசு; ஆள்வோர் நல்லமைச்சர்களின் நற்கருத்தை உணர்ந்து, பயனில்லா மக்களின் சொல்லுக்குச் செவி சாய்க்காது நாட்டை ஆளவேண்டும். ஆளுகின்ற அவர்களே நாட்டைக் கலங்கச் செய்தல் கூடாது”—இவை கலித்தொகை நமக்குணர்த்தும் அரசியற் பாடம்; எக்காலத்திற்கும் பொருந்திவரும் நல்லதொரு பாடம்.

—பச்சையப்பன் கல்லூரி இதழ்

அதுவே காரணம் அவனை நான் போகச் சொல்வதற்கு, என்று கர்ச்சித்தார் அவர்!!

அவர் சொல்லியதும் உண்மைதான். கையும் காலும், சாதாரணமாக இருப்பதைவிட, அவனுக்கு நீண்டிருந்தன; சூம்பியதோள்; கைவிரலும் கால்விரலும் நீண்டு அருவருப்பாகத்தானிருந்தன; சீவப்படாத தலை, உருவத்தை இன்னும் கோரமாக்கியது. அவன் ஒன்றும் 'அழகு'ப் போட்டிக்காக அங்கே போகவில்லை! அவனை, ஒரு வழக்கில் வாதாடும் வக்கீலாக அங்கே அனுப்பியிருந்தார்கள். வழக்கின் முக்கிய வக்கீலான எட்வின் ஸ்டான்டன் என்பார் தான், அருவருக்குத் தக்க தோற்றத்துடன் காட்சியளித்த ஆபிரகாம்லிங்கனைப்பற்றி இவ்வண்ணம் சொன்னார்.

பரபரப்பான வழக்கு அது! அமெரிக்காவைக் கலக்கிய விசித்திரமான வழக்கு!! மெக்கார்மிக் என்பார் கொடுத்திருந்தார். தான் கண்டுபிடித்த ஒன்றை மேன்னி என்பார், தன் அனுமதியில்லாமல் பயன்படுத்திக் கொண்டதால் தனக்கு 4-இலட்சம் டாலர் தரவேண்டுமென்று, மெக்கார் வழக்கு தொடர்ந்திருந்தார். பல தயாரிப்பாளர்கள், மேன்னியின் பக்கம் நின்றார்கள். வாட்சன் எனும் ஒரு தயாரிப்பாளர், ஆபிரகாம்லிங்கனையும், இவ்வழக்கில் பங்கேற்கும்படிப் பணித்தார்

நாற்பத்தாறு வயதிருக்கும் லிங்கனுக்கு! கடன் தொல்லைகள் கடித்துக்கொண்டிருந்த நேரம்! தொட்டதெல்லாம் தோல்வி, தோல்வி என்கிற துயரம் அவர் மனத்தைத் துளைத்துக் கொண்டிருந்த சமயம்! எதிர்காலம், இருளடைந்திருந்தது. அரசியல் வாழ்வில், அடியெடுத்துவைத்துக் கொண்டிருந்த அரும்பு நேரம். 500 டாலர்கள் 'அட்வான்சு' கொடுத்து, வாட்சன், லிங்கனை அழைத்தார்! உண்மையில் வாதாடப்போகும் வழக்கின் சட்ட நுணுக்கங்கள் அவ்வளவாகப் பயிற்சியில்லையென்றாலும், வந்த பணத்தை விட விருப்பமின்றி, லிங்கன் ஒப்புக்கொண்டார். உடனடியாக, சம்பந்தப்பட்ட சட்ட நூல்களையெல்லாம், படித்துத் தன்னைத் தயார்செய்துக்கொண்டார்.

இந்தக் கட்டத்தில், வழக்காடும் இடம் மாறியது; வக்கீலும் மாறினார். எட்வின் ஸ்டாண்டனை அமர்த்தினார்கள். அவரோடுகூட, ஆப்ரகாம்லிங்கனையும் சேர்த்துவிடவேண்டும் என்கிற ஆசையோடு, வாட்சன் அழைத்துச் சென்றார். எட்வின்ஸ்டான்டன் தங்கியிருந்த ஓட்டலுக்கு, இருவரும் போனார்கள். சரியான உடையின்றி, அதோடு கோரமான உருவத்தோடு, காட்சியளித்த லிங்கனைக் கண்டபோது தான், தலைப்பில் தந்த வார்த்தைகளைக் கொட்டினார் ஸ்டாண்டன்!!

லிங்கன் எதுவும் பேசவில்லை. இதில்தான் அவரது பெருந்தன்மையே இருக்கிறது. வார்த்தைகள் துளைத்தன; பேசாதிருந்தார். படபடவெனப் பதிலளித்துவிடலாம்; அளிக்கவில்லை — சமயம் வாராமலா போகப்போகிறது என்றே நின்றார்! அவர் நினைத்த சமயம், வாராமல் போகவில்லை— வந்தது—தன்னைப் புண்படுத்திய அந்த வக்கீலுக்குப் பதிலுக்குப் பதில் செய்தார்! எப்படிப்பட்ட பதில் தெரியுமா !!

ஜார்ஜ்ஹார்டிங் என்கிற இன்னொரு வழக்கறிஞர் ஸ்டான்டனுடன் சேர்த்துவிடப்பட்டார். இருவரும் தீவிரமாக வாதிட்டனர்; வழக்குச் சம்பந்தமாகப் பேசினர். கூடிக்கூடிக் கலந்தனர். இவ்வளவுக்கும் லிங்கன், அறைக்குவெளியேதானிருந்தார். அவரைக் கூப்பிடவுமில்லை, ஒரு வார்த்தை சொல்லவுமில்லை, மரக்கட்டையை விடக் கேவலமாகவே நடத்தினர் !!

வழக்கில் ஸ்டாண்டன், ஹார்டிங் இருவருக்குமே, பேசுவது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால், வழக்கின் எந்தக் கட்டத்திலும் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை, லிங்கனுக்கு. ஆனால், அவருக்கெனப் பேசிய தொகையை மட்டும் கொடுத்துவிட்டார்கள். இது யார் உள்ளத்தைத்தான் உறுத்தாது? லிங்கனால் இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை! எனினும் 'காத்திருப்போம்' என்று இருந்தார். ஆத்திரத்துக்கு வேலை கொடாமல் அமைதியாக இருந்தார்.

ஐயா! இந்த வழக்கில் வாதாட நான் பற்பல விபரங்களைச் சேகரித்தேன். அவை இதோ. ஹார்டிங்குக்காவது இவை பயன்படக்கூடும் எனக் கருதுகிறேன்" என்று சொல்லித் தனது குறிப்புகளை, வாட்சனிடம் கொடுத்தார். அதை வாட்சன் கொடுக்க, ஹார்டிங், வாங்கி புரட்டிக்கூடப் பாராமல் மேசையின் மீது வீசி எறிந்தாராம்! அடுத்த நாள் வரையிலும் அந்தக் குறிப்புகள் வீசப்பட்ட இடத்திலேயே கிடந்தன.

வழக்கு நடந்தபோது, 'டின்னர்கள்' நடந்தன; உபசாரங்கள் நடைபெற்றன; ஒரேஒரு ஆள் மட்டும் அழைக்கப்படவில்லை! ஆபிரகாம்லிங்கன்தான் தான் அவர்!!

வழக்கு ஆரம்பமாயிற்று. ஸ்டாண்டன் எழுந்து நின்று வாதாடினார். வழக்கு மன்றத்திலிருந்த லிங்கனுக்குத் தன்னைப் படுத்திய அவமானமெல்லாம் மறைந்தது. ஏனெனில், ஸ்டாண்டன் அவ்வளவு அருமையாக வாதாடினார்! லிங்கன், சொந்த வெறுப்பை அளவாக வைத்து ஸ்டாண்டனின் திறமையின் அளவினை மதிக்கத் தவறவில்லை. வாயார மனமாரப் பாராட்டினார்; மனதுக்குள் மகிழ்ந்தார்.

இந்த ஸ்டாண்டனை, அது முதல் நினைவிலேயே வைத்திருந்தார் லிங்கன்.

கொஞ்சக் காலத்துக்கெல்லாம் அருவருப்பானவன் என்று கருதப்பட்ட அதே ஆபிரகாம்லிங்கன், அமெரிக்காவின் தலைவரானார்.

வார்த்தைகளால் சுட்டுப் பொசுக்கிய ஸ்டாண்டனை, பழி வாங்கவேண்டுமென்றால் எதுவும் செய்யலாம் லிங்கன். பழிக்குப் பழி வாங்கினார்! எப்படித் தெரியுமா? ஸ்டாண்டனை, இராணுவ மந்திரியாக ஆக்கி!!

லிங்கனை, ஸ்டாண்டன் படுத்திய பாட்டையெல்லாம் அறிந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்—ஸ்டாண்டனே, இந்தச் சேதி வந்ததும் திகைத்தார்—ஆனால், அருமையான ஒரு திறமைசாலியைப் பயன்படுத்திக்கொள்ள, லிங்கன் தவறவில்லை! சொந்த விருப்பு வெறுப்பினைவிடப் பொது நலனே அவர் கண்முன் நின்றது!!

தன்னைப் புண்படுத்தியவர்களைப் பழிக்குப்பழி வாங்கி, தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளவே, காட்டு மனம் படைத்தவர்கள் இறங்கி இருப்பார்கள். லிங்கன் அப்படிச் செய்யவில்லை. அவருடைய பணியும் இலட்சியமும், இதுபோன்ற சில்லறைகளில் அவருடைய சிந்தனையைச் செலுத்தவில்லை! ஒரு நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு அவரிடம் இருந்தது; ஒரு நாட்டை வழிகாட்டிச் செல்ல வேண்டிய பொறுப்பை அவர் பெற்றிருந்தார்; நாட்டுக்கான நலன்களைப் பல வழிகளிலும் தேடவேண்டிய

(37-ம் பக்கம் பார்க்க)

Edted, Printed and Published bp P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் :
பி. வீரராகவன்,

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0 6 0	...	...
மூன்றும் வகுப்பு	0 7 0	...	...
நான்காம் வகுப்பு	0 10 0	30	13-5-'59

M. விவேகானந்தா, B. Sc., L. T.

ஐந்தாம் வகுப்பு	0 8 0	9	10-4-'57

புதிய தேச ஆட்சி முறை

ஆசிரியர் :
D. சிவசங்கர ராவ், B. A., L. T.

ஐந்தாம் வகுப்பு	0 8 0	10	4-4-'56

நம் நாட்டு வரலாறு

ஆசிரியர்கள் :
M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.
T. S. உமாபதி, M. A., L. T.

ஐந்தாம் வகுப்பு	0 9 0	2	30-4-'58

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் :
பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0 8 0	...	...
மூன்றும் வகுப்பு	0 12 0	43	13-5-'59
நான்காம் வகுப்பு	0 14 0	25	13-5-'59

Regd. No. 5018. ARAMBAKKALVI

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் :

K. **வீராசாமி**, B. A., L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஐந்தாம் வகுப்பு	0 12 0	5	10-4-'57

சிறுவர் சமூக நூல்

ஆசிரியர்கள் :

பி. வீரராகவன்

* **த. சே. உமாபதி**, M. A., L. T.

இரண்டாம் வகுப்பு	0 10 0	...	...
மூன்றும் வகுப்பு	0 12 0	...	...
*நான்காம் வகுப்பு *(மாவட்ட வாரியாக)*	1 14 0		*அங்கீகாரம் பெற்றது.*

சிறுவர் பூகோளம்

ஆசிரியர் :

V. K. **சேஷாத்திரி**, B. A., L. T.

ஐந்தாம் வகுப்பு	0 12 0	9	4-4-'56

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் :

வித்துவான் வை. சுப்பிரமணியம்

ஆறும் வகுப்பு	0 13 0	3	10-4-'57
ஏழாம் வகுப்பு	0 14 0	2	13-5-'59

VENKATESAN PRESS, MADRAS - 1.